நூ. 280.

# வேடதாரி

PRESENTED BY
V. PR. PL. V. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

7.7.764
11.2.78

4296

ஆசிரியர் :

நாரண - துரைக்கண்ணன்
"ஜீவா"

PRESENTED BY
V. PR. PL. V. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

பாகனேரி

முத்தமிழ் நிலையம்
75, வரதா முத்தியப்பன் தெரு
சென்னை .1.

**முதற் பதிப்பு**

1947ஆ செப்டம்பர்மீ

2000 பிரதிகள்.

[உரிமையுடையது.]

விலை ரூபா 1—4—0

பிரசுரித்தவர் :

மே. சக்கரவர்த்தி நயினர்,

C. I. P. House, Madras Q. H. M. S. 459.


Printted at the "Veekay Printers," Madras. Q. H. M. S. 522.

# பதிப்புரை

ஜீவாவின் எழுத்தோவியங்கள் சிறந்த கருத்துக்கள் கொண்டவை. சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இவர் அமைக்கும் கதைகள், அறிவுக்கு நல் விருந்து அளிப்பன வாகும். சமூகத்திலே, கல்வி நலனும் பொருள் வளமுமுடைய சிலர், பெரிய வர்கள் போல வேடம்பூண்டு, நடித்து, எங்ஙனம் மக்கட்குத் தீங்கிழைக்கின் றனர்கள் என்பதை "வேடதாரி" என்ற இந்நவீனம் மூலம், அழகான சொல் லோவியம் தீட்டியிருக்கின்றார் ஜீவா. 'பிரசண்ட விகடன்' ஆசிரியராக விருந்து, இவர் செய்யும் தொண்டு, தமிழுலகம் நன்கறியு மாதலால், இவ ரைக் குறித்து நாங்கள் அதிகம் கூறத் தேவையில்லை.

சென்னை
1-10-47

முத்தமிழ் நிலயத்தார்



# வேடதாரி

## பட்டமளிப்பு விழாவும்—கலாட்டாவும்

"சிவ சிவ சிவா! அர அர சம்போ! மகா தேவா!" என்று பிறர் காதுகளில் விழும்படியாக உச்சரித்துக்கொண்டே, தம் மோட்டார்காரை விட்டுக் கீழே இறங்கினர் தரும பூஷணம் சந்திர சேகரம் பிள்ளை.

"வாருங்கள்; வாருங்கள். தங்கள் வரவைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்கே தாங்கள் வாராமல் போய் விடுகிறீர்களோ என்று பயந்து கொண்டே இருந்தோம்........"

"உற்சவமூர்த்தி இல்லாமல் திருவிழா நடைபெறாது என்று அவருக்குத் தெரியாதா என்ன? ......."

"சாக்ஷாத் சிவபெருமானே அவனது அடியார்களாகிய நம்மை யெல்லாம் ஆட்கொள்ள மானிட உருக்கொண்டு இங்கு எழுந்தருளினரோ என்று நினைக்கும்படியாக இருக்கிறது நமது பிள்ளையவாளைப் பார்த்தால்...."

"ஏன்? இவர் அந்தப் பரமசிவத்தின் மறு அவதாரந்தான். அதில் சந்தேகமென்ன? இல்லாவிடில் இந்தக் கலியுகத்தில் இவரைப்போல் மகா பக்திமானும், வரையாது வழங்கும் கொடை வள்ளலும் வேறு யாரிருக்கிறார்?......."

இவ்விதமான உபசார மொழிகளுடன் சிவனடியார் திருக்கூட்டத்தினர் தரும பூஷணம் சந்

திரசேகரம் பிள்ளையை வரவேற்றனர். தரும பூஷணமோ, சிவபூஷணமாய் விபூதி ருத்திராட்ச பூஷணமாய் விளங்கினர். அவர் அடியில் பட்டுச்சரிகை வேஷ்டியைப் பஞ்சகச்சமாக வைத்துக் கட்டி, மெல்லிய பட்டில் தகதகாயமாய்த் திகழும் சரிகை இழைக்கப்பட்ட மேல் வேஷ்டியை மாலையாகத் தரித்திருந்தார். தேக மெங்கணும் தூளணமாயும் திரிபுண்டரமாயும் விபூதியைப் பூசிக்கொண்டு, நெற்றியில் அகலமாகச் சந்தனப் பொட்டு இட்டுக் கொண்டிருந்தார். அவரது அப்போதைய வைதீக கோலம் எப்பேர்ப்பட்டவர்கள் மனத்தையும் கவரக்கூடியதாக இருந்தது.

தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளைக்குச் சிவனடியார் திருக்கூட்டத்தினரின் உபசாரமொழிகள் உள்ளுக்குள் உவப்பை யளித்ததாயினும், அவற்றை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் நடக்கலானர். அவருடன் காரில் வந்த நண்பர்கள் அவருக்கு இருமருங்கிலும் செல்லலாயினர். சிவனடியார் திருக்கூட்டத்தின் நிர்வாகிகள் மிகப் பணிவாக வழிகாட்டிச் செல்ல, சந்திரசேகரம் பிள்ளை பொன் பூண் கட்டப்பட்ட தடியை ஊன்றியவாறு சிறிது தூரத்தில் ஒரு சிறு பந்தரில் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தை நோக்கிப் பெருமிதமாக நடக்கலானர். தரும பூஷணத்தின் வருகை கூட்டத்தினரிடையே ஒருவிதக் கலகலப்பை யுண்டு பண்ணியது. நிர்வாகிகள் கூட்டத்தை வழி விலக்கிக் கொண்டு முன்னே சென்று அவரை மேடைக்கு அழைத்துச் சென்றனர். இதற்குள் ஏற்கெனவே

மேடைமீதிருந்த நாற்காலி யொன்றில் அமர்ந்திருந்த கூட்டத் தலைவர், எழுந்து கைலாகு கொடுத்துத் தரும பூஷணத்தை மேலழைத்து நடுவே போடப்பட்டிருந்த வெல்வெட் ஆசனத்தில் அமரச் செய்தார். உடனே, கூட்டத்திலிருந்து மகிழ்ச்சி யொலியும், கைதட்ட லொலியும் பலமாகக் கிளம்பின.

சில விநாடிகளுக் கெல்லாம் கூட்டத்தில் அமைதி நிலவியதும், கூட்டத் தலைவர் எழுந்து, "சபையோர்களே! இன்றைய வைபவ விவரம் உங்க ளனைவர்க்கும் தெரிந்ததே. நமது கலியுக கர்ணனாகிய தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளை யவர்களுக்கு அரசர் பிறந்த தினத்தை முன்னிட்டு சர்க்கார் 'ராவ்பகதூர்' பட்டம் அளித்துக் கௌரவித்ததைப் பாராட்டவே நாம் இங்குக் கூடி யிருக்கிறோம். கொடை வள்ளலான நமது பிள்ளையவர்களுக்கு ராவ்பகதூர் பட்டம் மட்டுமல்ல; உலகில் எவ்வளவு பெரிய கௌரவப் பட்டங்கள் உள்ளனவோ, அவ்வளவு பட்டங்களையுங் கொடுத்தாலுந் தகும் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். அவர் செய்திருக்கும் தருமங்களை யெல்லாம் சொல்லுவதென்றால், அதுவே மகா பாரத மாகிவிடும். அவர் பெயரால் அன்ன தான சமாஜங்கள் எத்தனை நடைபெறுகின்றன? ஆலய ஜீர்ணோத்தாரண கைங்கரியங்களுக்கும், புதுக்கோயில்கள், கோபுரங்கள் கட்டுவதற்கும் எவ்வளவு பொருளுதவி செய்திருக்கிறார்? இவரது தாராள குணத்தினாலேயே பல தருமப் பள்ளிக்கூடங்

களும், தரும ஆஸ்பத்திரிகளும் நடக்கின்றன என்பதை அறியாதார் யார்? இவற்றை யெல்லாம் அளவிட்டு உரைக்க முடியுமோ! அவரைச் சென்றடைந்து குறை யிரந்தவர் எவரும் வெறுங் கையோடு திரும்பி வந்ததில்லை என்பது உலகறிந்த உண்மை. அத்தகைய தரும சொரூபியும் பரம பக்தருமான நமது பிள்ளையவர்களை நான் என்னவென்று புகழ்வது! இவரது தகுதி, குணம் அறிந்து கௌரவித்தார்களே அந்தக் காருணிய மிக்க கவர்ன்மெண்டார்; அவர்களைத் தான் என்ன சொல்லால் பாராட்டுவது? தருமமே உருவான இவரை நாமெல்லாம் **தருமபூஷணம்** என்று சிறப்பித்து அழைத்தோம்; இவரது பெருமைக்கு இதுமட்டும் போதாதென்றுதான் சர்க்கார் ராவ் பகதூர் பட்டத்தை மனமுவந்து அளித்தார்கள். ஆகவே, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான சிவ பெருமான் நமது பிள்ளையவர்களையும், சர்க்காரையும் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்று ஒரு சிறு பிரசங்கஞ் செய்துவிட்டு, காரியதரிசி அளித்த ரோஜாமாலையையும், சரிகை ஜிகினா மாலையையும் பிள்ளையவர்கள் கழுத்தில் அணிந்தார். அதை யொட்டிக் கூட்டத்திலுள்ளோர் கரகோஷஞ் செய்தனர். அதன் பின்னர், மற்றுஞ் சில பிரசங்கிகள் தருமபூஷணத்தைப் பலபடப் பாராட்டிப் பேசினர்.

கடைசியாக, ராவ்பகதூர்—தருமபூஷணம்-சந்திரசேகரம் பிள்ளையவர்கள் தம்மைப் பாராட்டிப் பேசிய பிரமுகர்களுக்கு நன்றி செலுத்து முறை

யில் பேச எழுந்தார். அவர் ஒரு முறை கூட்டத்தி லுள்ளாரைத் தம் கண்களால் ஆராய்ந்து பின்னர் அமர்த்தலாகத் தொண்டையை ஒருவிதமாகக் கனைத்துக்கொண்டு, " அன்பர்களே! நீங்களெல் லாரும் கேவலம் நாயினுங் கடையனாகிய அடியேன் மீது கொண்டிருக்கும் அன்பைப் பார்க்கும்போது, உங்களுக்கு நான் எந்தவிதமாக நன்றி செலுத்து வதென்று தோன்றவே யில்லை. இன்று இங்கு பேசிய பெரியார்களெல்லாரும்என்னைப்பற்றி என் னென்னமோ வெல்லாம் புகழ்ந்து பேசினார்கள். இவர்களுடைய புகழ்ச்சி மொழிக்கெல்லாம் இந்தச் 'சடம்' அருகதையுடையதா என்று எண்ணிப் பார்த்தால் எனக்கே வெட்கமாக இருக்கிறது.

" இந்த உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளெல் லாம், சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய மானிடர் களாகிய நம்மாலா நடைபெறுகின்றன? ஆனந் தக் கூத்தனாகிய நடராஜப் பெருமானல்லவா இவைகளை யெல்லாம் இயற்றுகிறான்? அந்தச் சூத்திரதாரியல்லவா மனிதப் பதுமைகளாகிய நம்மையும், உலகிலுள்ள மற்ற ஜீவராசிகளையும் ஆட்டி வைக்கிறான்?—சிறிது நேரத்துக்கு முன் பேசியவர்கள், நான் பல தான தருமங்களையும் கைங்கரியங்களையும் செய்திருப்பதாகக் கூறினார் கள். அவைகளை யெல்லாம் நானா செய்தேன்? இறைவனல்லவா இயற்றி வைத்தான்? எனக்கு ஏற்பட்டுள்ள சொத்தும் சுதந்தரமும், அனைத் தும் அவனது உடைமை யல்லவா! உடை மைக்குச் சொந்தக்காரனுக்குத் தான் அவை

களைக் கையாளுவதற்கும் பிறருக்கு அளிப்பதற்கும் உரிமையுண்டு; அதிகாரமுண்டு. உருஅருவற்றவனுகிய ஆண்டவன் நேரே வந்து எதுவும் செய்வதில்லையாகையால், மானிடர்களாகிய நம்மைக் கருவிகளாகக் கொண்டு உலகில் நடைபெறும் காரியங்களை இயற்றி வைக்கிருன். இதுதான் உண்மையேயொழிய, புழுப்போன்ற மானிடர்கள் தாம் ஏதோ சாதித்து விடுகிறேம் என்று கூறுவது முற்றும் மடமையாகும். எனக்கு ஏற்பட்டுள்ள செல்வமும், தகுதியும்—இப்போது கொடுக்கப்பட்டுள்ள கௌரவப்பட்டமும் கூட—அவனளித்த வாழ்வே!..............."

கூட்டத்திலுள்ள சிலர், "ஆஹா! ஆஹா ஹா! என்ன அடக்கம்! என்ன பக்தி! மனிதர்களிருந்தாலும் இப்படியல்லவோ இருக்க வேண்டும் ...........ஆஹா ..........." எனக் கூறிப் பரவசப்பட்டனர்.

தருமபூஷணம் கண்களில் நீர் ததும்ப, மீண்டும் பேசத் தொடங்கி, "பதி, பசு, பாசங்களின் தன்மையுணர்ந்தவர்கள், 'நான் செய்கிறேன்; எனது பொருள் இது' என்று பெருமிதமாகக் கூற மாட்டார்கள். 'நான், எனது' என்ற அகங்கார மமகாரங்களைச் சிறிதும் கொள்ள மாட்டார்கள். நாம் பார்க்கும் அல்லது இருக்கும் இவ்வுலகம் அநித்தியம்! நமது தேகம் அநித்தியம்; உலகப் பொருள்களெல்லாம் அநித்தியமானவையே. இவ்வுண்மையையுணர்ந்து தான் பெரியோர்கள் உலக நிலையாமை, யாக்கை (உடம்பு) நிலையாமை, செல்வ

நிலையாமை என்று நிலையாமையின் தன்மையைத் தெளிவாகக் கூறி யிருக்கிறார்கள்.

> "வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
> பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
> தாழாதுஅறஞ் செய்மின் தடங் கண்ணான் மலரோனும்
> கீழ்மேலுற நின்றான் திருக்கேதார மெனீரே."

என்று சைவ சமயாசாரியாராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியிருக்கும் அருள் வாக்கை நோக்குங்கள். அன்பர்களே! நமக்கு ஏற்பட்டிருக்கும் வாழ்க்கை, கணத்துக்குக் கணம் மாறக் கூடியது; தூங்குவது போல மரணமும்; விழிப்பது போல பிறப்பும் ஏற்படுகிறது. 'நேற்றிருந்தான் இன்றில்லை' என்ற செய்தியை நாம் தினந்தோறும் கேட்டு வருகிறோம்; இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லையே' என்று தவராஜ சிங்கமாகிய தாயுமானார் கூடப் பாடி ஏங்கினார் என்றால், மனைவி மக்கள் சுற்றம் என்ற குடும்பப் பந்தத்தால் கட்டப்பட்ட நாம் எம்மாத்திரம்? ஆகவே, நமக்கு இறைவன் திருவருளால் கிடைத்துள்ள செல்வத்தைப் பிறர்க்கு— முக்கியமாக வறுமையால் வாடும் ஏழை எளியவர்களுக்குத் தாராளமாகக் கொடுத்து உதவ வேண்டுவது தான் நமது கடமை. என்போன்று செல்வந்தர்களாய் இருப்பவர்களெல்லாரும் உள்ள பொருளைப் பிறர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துதவக் கடவுளால் நியமிக்கப்பட்டிருக்கும் தர்மகர்த்தர்கள். ஆதலால், அவர்கள் தங்கள் சொந்த நலத்

துக்கும் தேவைக்கும் மட்டும் அவைகளைப் பயன் படுத்திக் கொள்ளாமல், மற்றவர்களுக்கும் கொடுத்து உதவவேண்டும். இத் தத்துவத்தையே மகாத்மா காந்தியும் அடிக்கடி கூறி வருகிறார். இவ் வுண்மையை யறியாது சில தான்தோன்றி வாலிபர்கள், அம் மகான் மொழிகளிலும் குற்றங் கூறி வருகிறார்கள். என்னே அறியாமை!

"அஹிம்ஸா பரமோ தர்ம:" என்ற வேத வாக்கியத்தைக் கடைப்பிடித்துப், பணக்காரர்கள் தங்கள் செல்வத்தைத் தரித்திர நாராயணர்களுக்கு வாரிவாரி இறைக்கவேண்டும். இல்லையென்று வரும் எவர்க்கும் வரையாது அளிக்கவேண்டுமே யொழிய, டாம்பீகத்தையும், பெருமையையும் பெயரையும் புகழையும் கருதி வெற்றாரவாரஞ் செய்து வெளிவேஷம் போடக்கூடாது.........."

இச் சமயத்தில் கூட்டத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த வாலிபனொருவன் எழுந்து சபைத் தலைவரை நோக்கி, "தலைவரவர்களே! இப்போது நமக்கெல்லாம் ஞானோபதேசஞ் செய்யும் தரும பூஷணத்தின் பிரசங்கத்தில் எனக்கு ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவரை ஒரு கேள்வி கேட்க எனக்கு அநுமதி தரவேண்டும். இல்லாவிடின், அவர் பேசிய பிறகாயினும் நான் பேச இடந் தரவேண்டும்................." என்று கேட்டான்.

இதற்குள் கூட்டத்தில் பரபரப்பு உண்டாயிற்று. கூட்ட நிர்வாகிகள் அவ்வாலிபனை நோக்கி ஆவேசத்தோடு ஓடினர்.

"உட்கார்! உட்கார்!!"

"ஒழுங்கு; ஒழுங்கு; உட்கார்!"

"பிரசங்கத்தி னிடையே யாரும் பேசக் கூடாது!"

"இது தனிப்பட்ட கூட்டம்; ஒரு பெரியாரைப் பாராட்டக் கூடிய கூட்டம். மற்றவர்கள் குறுக்கிட்டு அமைதியைக் கெடுப்பது நியாய மில்லை."

"நீர் யார் ஓய்! கேள்வி கேட்க."

"காங்கிரஸ் கூட்டத்திற்குப் போ; கேள்வி கேட்டுக் கலாட்டா செய்ய."

"அந்த ஆளை வெளியே தள்ளுங்கள்; தரும பூஷணம் பிள்ளையவாளை அவமானப் படுத்தும் முறையில் தான்தோன்றித்தனமாய்க் கேள்வி கேட்க வந்து விட்டான்."

இவ்விதமாகக் கூட்டத்தின் நாலாப் பக்கங் களிலு மிருந்து கூக்குரல் கிளம்பலாயிற்று.

"இவன் நம்ப ராஜசேகர னில்லையா?..........,'

"ஆமாம்; நம்ப ஊர் காங்கிரஸ் தலைவனயிருப் பவன் இவன் தான்;.........."

"பி. ஏ. பட்டமெல்லாம் பெற்றும் உத்தி யோகத்துக்குப் போகாமல், ஊருக்கு உழைக்க வும், தேச ஊழியஞ் செய்யவுமே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறுன்.........."

"உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது இவன் சிறைக்குக்கூடப் போயிருக்கிறுன், சார்......."

"ரொம்ப நல்ல பையனுங்க. இவன் இருப்பது நம்ம ஊருக்கே பெருமைங்கோ. இவனால் எவ்வளவு பேர் நன்மை யடைந்து வருகிறார்கள் தெரியுங்களா?..........."

"ஆமாமாம். இவன் ஏன் இடையே எழுந்து கேள்வி கேட்க.........."

"கேட்டாலென்ன ஐயா! ஏதோ விவகாரமில்லாமலா நன்றாய்ப் படிச்ச பிள்ளை கேள்வி கேட்கத் துணிந்திருப்பான்..........."

"அவன் கேள்வி கேட்க எழுந்தால், தரும பூஷணம் பதில் சொல்லிவிட்டுப் போகிறார். இவர்கள் ஏன் இப்படிக் கத்த வேண்டும்?........."

"போலீஸார் தடியடிக்கும், அடக்குமுறைக்கும் பயப்படாதவனை, இவர்கள் போடும் காட்டுக் கூச்சலுக்கும், வெற்று ரவாரத்துக்கும் பயப்படப் போகிறான்? ................."

"இருங்கள்; இருங்கள். தரும பூஷணம் தலைவரிடம் ஏதோ சொல்கிறார். என்ன நடக்கிறதென்று பார்ப்போம்................."

இவ்விதமாக மற்றுஞ் சில பேர் பேசலானார்கள். இவ்வளவு ஆரவாரங்களுக் கிடையிலும் ராஜசேகரன் என்னும் அவ்வாலிபன் அமைதியாகவே நின்றிருந்தான். தூய கதருடை யணிந்திருந்த அவன் முகத்தில் புன்சிரிப்பு மிளிர்ந்தது. இவ்வாலிபனைக் கண்டதுமே தருமபூஷணத்தின் முகம் வெளுத்துப் போய்விட்டது. அதற்குமேல் பேச அவருக்கு நாவெழவே யில்லை. தேகமெங்க

ணும் வியர்வை யரும்பி அவரது பட்டுப் பீதாம்பரங்களை நனைத்தது. அவர் மெதுவாகக் குனிந்து தலைவர் காதில் இரகசியமாக ஏதோ ஓதி விட்டு மேடையை விட்டு மெல்ல நழுவலானார். அவருடன் வந்தவர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். தலைவர் ஏதோ பேச எழுந்தார். ஆயினும் கூட்டத்தில் வர வரக் குழப்பம் அதிகரிக்கவே ஒன்றும் பேச முடியவில்லை. ஆகவே, தலைவர் நிலைமையைச் சமாளிக்க முடியாதென்று அறிந்து கூட்டத்தைக் கலைத்து விட்டதாகக் கூறிவிட்டு இறங்கிப் போய் விட்டார். நிர்வாகிகளும் ஒன்றுந் தோன்றாமல் மூலைக் கொருவராய் மறைந்தனர். ராஜசேகரன் தன் தோழர்களுடன் கூட்டத்தை விட்டு வெளியேறினான். ஜனக்கூட்டத்தினர் பல விதமாகப் பேசிக்கொண்டும் புரளி பண்ணிக் கொண்டும் ஒவ்வொருவராகக் கலையலாயினர். இவ்விதமாகப் பாராட்டுக் கூட்டம் அலங்கோலத்தில் முடிந்தது.

## ஆஷாடபூதி

"அம்மா! ஒரு பிடி சோறு இருந்தாப் போடுங்க. நாலைந்து நாளா பட்டினி சாமி!.................." என்று ஒரு பிச்சைக்காரப் பையன் "திருச்சிற்றம்பலம்" எனும் பெயருடைய மாளிகை வாயிலில் நின்று இரக்கமாகக் கூவினன். அவனது குழிந்த கண்களும், ஒட்டிய தாடையும், விலா வெலும்பு எத்தனை என்று எளிதில் எண்ணக் கூடிய விதமாக உள்ள எலும்புக் கூடான தேகமுமே அச்சிறுவன் பரம தரித்திரத்தால் பீடிக்கப் பட்டவன், பல நாள் பட்டினியால் வாடி வருபவனென்பதைத் தெளிவாக்கப் போதியனவாய் இருந்தன.

"யாரடா அது!" என்று உள்ளே யிருந்து அதிகார தோரணையில் குரல் கிளம்பியது.

"பிச்சைக்காரன் சாமி! காதை அடைக்குது; கண் இருளுது. ஒரு கவளம் சோறு; இல்லாவிட்டா இம்பிட்டு கஞ்சி..........."

"போடா! தரித்திரம் பிடித்த நாயே! வருகிற பிச்சைக்காரப் பயல்களுக் கெல்லாம் சோறு போட்டுக் கொண்டிருக்க இது என்ன அன்ன சத்திரமா?..........."

"இங்கே போனு சோறு துணி எல்லாம் கிடைக்கும்னு சொன்னுங்க, சாமி!.....மவராசா! பசிக்கிற வயித்துக்கு ஒரு கை கூழு வார்த்தாலும் உங்களுக்குப் புண்ணியமுண்டு. தருமம் தலை காக்கும்; தருமதுரை."

"இதென்ன! பெரிய தொல்லையாப் போச்சே! —நாம் ஏதோ பேசிக் கொண்டிருந்தால் இச் சனியன்கள் வந்து 'வாள் வாள்'ன்னு தொண்டை கிழிய கத்தறதுகள். —அந்தப் பயலைத் தொலைத்துவிடுகிறது போல, இப்பிச்சைக் கார நாய்களையும் சுட்டுத் தள்ளி விட்டால் நிம்மதியா யிருக்கும்.........." என்று முணகினர் உள்ளே யிருந்த கனவான்.

"ஐயோ உசிர் போகுதே! மயக்கமா வருது சாமி! கொஞ்சம் கருணை காட்டுங்க.........."

"டே ராஸ்கல். போகிருயா, இல்லையா? இங்கே ஒன்றுமில்லை போடா என்ருல், என் னென்னமோ வெல்லாம் பேசுகிருயே!.........." என்று கர்ஜித்துக் கொண்டே மேன்மாடியின் முற்றத்துக்கு வந்தார் தருமபூஷணம்.

என்ன தருமபூஷணமா? அவரா இவ்விதம் பிச்சைக்காரச் சிறுவனை விரட்டி யடிக்கிருர்? ஆம், தருமபூஷணந்தான். அவர்தான். வெளியே தருமபூஷணமாய் விளங்குபவர், உள்ளே தரும தூஷணமாய் விளங்குகிருர். ஒன்றுக்கு ஒன்று நேர்மாருன இருவிதமாக நடிக்கும் தருமபூஷணத் தைப் போன்ற ஆஷாடபூதிகள் எத்தனையோ பேர் இவ்வுலகில் இருக்கத்தான் இருக்கின்றனர்? இதுதான் உலகப்போக்கு.

" சாமி! கண்திறந்து பாருங்க...."

" மரியாதையாகச் சொன்னல் போகமாட் டாய். டேய் முருகா! எங்கே இருக்கிருய்?

வாசலிலே கட்டி யிருக்கிற 'டைக'ரை இவன்மீது அவிழ்த்துவிடடா!'' என்று கடுமையாகக் கட்டளை யிட்டார். அடுத்த கணம் அவரது உத்தரவு நிறைவேற்றப்படுகிறது என்பதற்கு அறிகுறியாக, ஏற்கனவே 'ளொள்' 'ளொள்' என்று குரைத்துக் கொண்டிருந்த நாய் வராந்தாவிலிருந்து பாய்ந்து வந்து அவ்வேழைச் சிறுவன் மீது தாவியது.

பாவம்! பையன்? 'ஐயோ! ஐயோ! எனக்குச் சோறும் வேண்டாம்; கஞ்சியும் வேண்டாம்; என்னைச் சும்மாவிட்டால் போதும். ஐயோ!'' என்று அலறிக்கொண்டே ஓடியவன் காலிடறி விழுந்தான். நாயோ அவன்மீது பாய்வதும், அவனைச் சுற்றிச் சுற்றி வந்து குலைப்பதுமாக இருந்தது. பையன் பெரும் பீதி கொண்டு நரக வேதனையோடு துடிதுடிக்கலானான். இப்பரிதாபக் காட்சியைக் கண்டு மாடியிலிருந்த தருமபூஷணம் சிரிக்கலானார். அவருக்குப் பின்னே நின்ற சிநேகிதர்களும் இம் மகிழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

"இது போல் அந்த ராஜசேகரன் பயலை யும் சித்திரவதை செய்யவேண்டும்'' என்றார் ஒருவர்.

"அவனைத் தூணில் கட்டி யடித்து உயிரோடு தோலை யுரித்தெடுக்கவேண்டும்'' என்றார் மற்றொருவர்.

"பெருஞ் செல்வாக்கோடு உள்ள உங்களை அவமானப் படுத்தத் துணிந்த அவனது

நெஞ்சமுழுத்தத்தைச் சூட்டுக்கோலால் தொளைக்க வேண்டும்'' என்றார் இன்னொருவர்.

"நீங்கள் சொல்கிறபடி, அவ்வளவு சாமானியத்தில் நடக்கக் கூடியதாயிருந்தால் அவனை எப்போதோ தொலைத்து விட்டிருப்பேனே! என்னை எதிர்த்தவர்களெல்லாரும் உயிரோடு இருந்ததில்லையே! நேற்று முளைத்த இந்தப் பயல் நமக்குப் பரம வைரியாக வல்லவோ வந்து வாய்த்திருக்கிறான்? இவனுக்கு ஆள் பலமும் ஊரார் ஆதரவும் இருந்து வருகிறதே! இல்லாவிடில்....... இதோ பாருங்கள்; இந்த வேடிக்கையைப் பாருங்கள்! நம் 'டைக'ரிடம் அந்தப் பிச்சைக்கார நாய் படும்பாட்டைப் பாருங்கள்...'' என்று சுட்டிக் காட்டியவாறு அப்பையன் நாயினிடம் சின்னாபின்னமாக அலைக்கப்படுவதைக் கண்டு தம் தொந்தி குலுங்கச் சிரித்தார்.

இதே சமயத்தில் மாளிகையின் முன் ஒரு மோட்டார் கார் வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து நாலைந்து காங்கிரஸ் தலைவர்கள் இறங்கினர். அவர்கள் உள்ளே நுழைகையில் ஒரு ஏழைச்சிறுவன் காவல் நாயினால் அலைக்கப்படுவதையும், தருமபூஷணம் பிள்ளை மேன்மாடியிலிருந்து கவனித்துச் சந்தோஷிப்பதையுங் கண்டு மலைத்து நின்றுவிட்டனர். இவர்கள் வருகையைக் கண்டதும், தருமபூஷணம் திடுக்கிட்டுப் போனார். தம்மைச் சமாளித்துக் கொண்டு, முகத்தில் அசடு வழிய, "வாருங்கள்; வாருங்கள்; வாருங்கள். ..........ஹி! ஹி! ஹி! ஒன்றுமில்லை. இந்தப் பையன்

உள்நுழைந்து திருடப் பார்த்தான். இதற்குள் நம் நாய் சங்கிலியை அறுத்துக்கொண்டு போய் அவனைத் துரத்துகிறது. சந்தடி கேட்டு வந்து கூப்பிட்டால்கூட அது விடமாட்டேனென்கிறது ......டேய் முருகா! நம் 'டைக'ரைப் பிடித்துக் கட்டு; பையனுக்கு ஏதாயினும் காய மேற்பட்டிருக்கிறதா என்று பார்த்து, பத்திரமாய் வெளியே கொண்டு போய் விட்டுவா" என்று உரத்த குரலில் கூறிக்கொண்டே உள்ளே போனார்.

உள்சென்றதும், தம் நண்பர்களை அடுத்த அறையில் போய் இருக்கும்படி கூறி விட்டு, அவசர அவசரமாகத் தம் ஆடைகளை மாற்றி விட்டுக் கதர் ஆடைகளை யெடுத்துத் தரித்துக் கொண்டார். பிறகு, துரிதமாகக் கீழே இறங்கிக் காங்கிரஸ் தலைவர்களை வரவேற்று, கதர் சுதேசி சாமான்களால் அலங்கரிக்கப்பட்டதும், தேசீயத் தலைவர்கள் உருவப்படங்கள் மாட்டப் பட்டதுமான ஒரு அறைக்கு அழைத்துச் சென்று ஆசனங்களில் உட்கார வைத்தார். இவரது ஆஷாடபூதித்தனத்தை அறியாத காங்கிரஸ் தலைவர்கள் அவர் உண்மையிலேயே காங்கிரஸ் அபிமானி என்று நம்பி அவரை நமஸ்கரித்தவாறு அமர்ந்தனர்.

தருமபூஷணம், மிக "விநயமாக, சிவ! சிவ! சிவா! ஏது பெரியவாள் இவ்வளவு தூரம் இந்த ஏழையின் குடிசைக்கு எழுந்தருளியது?..............." என்று கேட்டார்.

வந்தவர்களில் ஒருவர், "ஒன்றுமில்லை; நமது மகாத்மா காந்தி, ஹரிஜன இயக்க சம்பந்தமாகத் தென்னாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவது தங்களுக்குத்தான் தெரியுமே! அவர் கூடிய சீக்கிரம் நம் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு விஜயம் செய்யப்போகிறார். அச்சமயம் நம் ஜில்லா சார்பாக அவருக்கு ஏதாயினும் பண முடிப்பு அளிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறோம். அதற்காக ஊர் ஊராகச் சுற்றி ஆங்காங்குள்ள பிரமுகர்களைக் கண்டு வருகிறோம். இவ்வூரில் வந்தபோது தங்கள் பிரபலத்தையும் காங்கிரஸ் பக்தியையும் கேள்விப்பட்டோம். ஆகவே, தங்களைக் காண விரும்பினோம். ஆனால், இவ்வூர்க் காங்கிரஸ் தலைவர் ராஜசேகரன் என்ன காரணத்தாலோ தங்களைக் காண எங்களுடன் வரமுடியாதெனக் கூறிவிட்டார். ஆதலால் நாங்கள் மட்டும்..........." என்று கூறி நிறுத்தினர்.

தருமபூஷணத்தின் முகம் இருண்டது. மனத்தினுள் ஆத்திரம் மிகுந்தது. ஆயினும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது, " அர! அர சம்போ மகாதேவா!..........இதுதானா பிரமாதம்? இவ்விதத் தேச கைங்கரியத்துக்கு உதவாமலா?....
......." என்று கூறிக் கொண்டு வருகையில் வெளியே ஏதோ ஆரவாரங் கேட்டது. யாவர் கவனமும் அங்கே சென்றது. எல்லோரும் வெளியே சென்று பார்க்க விரும்பினர்.

தருமபூஷணம் கதவைத் திறந்து கொண்டு வாயிலில் வந்து பார்த்தார். மற்றவர்களும் அவர்

பின்னே வந்தனர். ஆரவாரம் வர வர வெகு சமீபமாக வந்து கொண்டிருந்தது. அடுத்த கணம் ஒரு இளம்பெண் இரைக்க இரைக்க ஓடி வந்து அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டுக் கடைசியாக இம்மாளிகையினுள் நுழைந்தாள். சில விநாடிகளுக்கெல்லாம் ஒரு கூட்டம் ஓடிவந்தது. ஆனால் அக் கூட்டம் அப் பெண் மாளிகையினுள் நுழைந்ததைக் கண்டு வெளியே நின்று விட்டது.

அப் பெண் தருமபூஷணத்தின் முன் ஓடி வந்து, "என்னைக் காப்பாற்றுங்கள். துன்மார்க்கர்கள் துன்புறுத்துகிறார்கள்" என்று பயத்தால் வாய் குழறக் கூறி நின்றாள். அவள் கிழிந்த ஆடையும், தலைவிரி கோலமுமா யிருந்தாளாயினும் இயற்கை யழகும் இளமையின் செழுமையும் அவள் முகத்தில் ததும்பி யிருந்தது. அவளைக் கண்ட தருமபூஷணத்தின் கண்கள் இமையாமல் அவளையே நோக்கி நின்றன.

காங்கிரஸ் தலைவர்கள் அவ்வேழைப் பெண்ணின்பரிதாப நிலையைக் கண்டு அவள்மீது இரக்கங் கொண்டனர். தருமபூஷணம் அவளுக்குத் தஞ்சமளிப்பாரோ, மாட்டாரோ என்று சந்தேகங் கொண்டு அவர் முகத்தை ஒருவிதமாக நோக்கினர். இதற்குள் தருமபூஷணம் தம்மைச் சமாளித்துக் கொண்டு, உடன் இருப்பவர்களைக் கடைக் கண்ணால் கடாட்சித்து அவர்களது மனக் குறிப்பை ஒருவாறு அறிந்தவராய், அப்பெண்ணை நோக்கி, " சிவ சிவ சிவா! அப்படியா! குழந்தாய்!

பயப்படாதே! உன்னைத் துரத்தித் துன்புறுத்திய கொடியவர்கள் யார்? சொல். அவர்களை இப்பொழுதே ஜெயிலுக்கு அனுப்ப வழி செய்கிறேன். நம் ஊரில்கூட—அதுவும் நாம் இருக்கும் இவ்விடத்தில்—இவ்வித அநியாயஞ் செய்யுந் துஷ்டர்கள் இருக்கிறார்களா?........." என்று கர்ஜித்தார். பிரளயகால ருத்திரனைப்போல் அவர் முகம் கோபத்தால் சிவந்தது.

அப்பெண் தரும பூஷணத்தின் பேச்சைக் கேட்டுச் சிறிது தைரியம் அடைந்தாளாயினும் அச்சத்தோடேயே மெள்ளத் திரும்பி வெளிப் புறத்தை நோக்கினாள். தருமபூஷணம் அவளுக்கு அபயமளித்து, "உன்னைத் துரத்தித் துன்புறுத்திய கொடியவர்கள் யார்? சொல். அவர்களை இப்பொழுதே ஜெயிலுக்கு அனுப்ப வழி செய்கிறேன்" என்று கூறியதைக் கேட்டதுமே வெளியில் நின்றிருந்த கூட்டம் இருந்த இடந் தெரியாமல் பஞ்சாய்ப் பறக்கலாயிற்று. ஆகவே, தன்னைத் துரத்தி வந்த துஷ்டர்கள் ஓடிப்போய் விட்டார்கள் என்று அறிந்ததும் அப்பெண் முற்றிலும் பீதியை யொழித்து ஒரு பெருமூச்சு விட்டாள். "ஐயா, நான் ரயில் ஸ்டேஷனுக்குப் பால், மோர் விற்று விட்டு வந்து கொண்டிருந்தேன். வழியிலே இரண்டு விடபுருஷர்கள் என்னை மடக்கிக்கொண்டு கண்ணைக் காட்டியும், பல்லை யிளித்தும் வாயில் வராத வார்த்தை யெல்லாம் சொல்லி நையாண்டி பண்ணினார்கள். நான் அவர்களையோ அவர்கள் பேசுவதையோ கவனியாத

வள் போல் ஒதுங்கியவாறு அவர்களை விட்டுவிலகிப் போக முயன்றேன். அவர்கள் என்னைப் போக விடாது வளைத்துக்கொண்டு என் கைகளைப் பிடித்து எதிரேயுள்ள தோட்டத்துக்கு இழுத்துக் கொண்டுபோக முயன்றனர். நான் மிகவும் பயந்து போய் அவர்களுடைய கைகளுக்கு அகப்படாது ஓடலானேன். அப்போதும் அத்துஷ்டர்கள் என்னை விடாது பின் தொடர்ந்து பிடிக்க முயன் றனர். அவர்கள் எப்படியும் என்னைப் பலாத்கா ரம் செய்வார்கள் என்று அறிந்த நான் பிறரை உதவிக்கு அழைக்கும் நோக்கத்தோடு மிகவும் கூச்சலிடலானேன். அச்சமயம் சிறிது தூரத்தில் இரு பக்கங்களிலு மிருந்து வந்து கொண்டிருந்த மனிதர்களும், கழனிகளில் வேலைசெய்து கொண் டிருந்த சிலரும் என்னவோ ஏதோ என ஓடோடி வந்தனர். ஆயினும் அதற்குள் இந்தத் துஷ்டர் கள் தங்கள் துன்மார்க்கச் செய்கையை மற்றவர் கள் அறியாமல் மறைக்கவேண்டி, “டேய்! பைத்தி யண்டோய்! கல் எடுத்து அடித்துவிட்டு என்னவோ உளறிண்டு ஓடுதுடோய்!” என்று கூவிக் கைகொட்டிச் சிரித்து, மற்றவர்களைக் கைகாட்டி யழைத்தவாறு என் பின்னே ஓடிவர லாயினர். வழிப்போக்கர்களும், உழவர்களும் உண்மை யென்னவென அறியாது அவ் வயோக்கி யர்கள் பேச்சை நம்பி முட்டாள்தனமாய் அவர் களைத் தொடர்ந்து ஓடி வந்தனர். சில வெறியர் கள் கற்களைக்கூட என்மீது எறிந்தனர்............... நான் உங்களிடம் தஞ்சம் புகாதிருந்தால் அந்

தத் துஷ்டர்கள் மற்ற மடையர்கள் துணைகொண்டு என்னைச் சித்திரவதை செய்திருப்பார்கள்.......?'' என்று நாத் தழுதழுக்க உடல் நடுங்கக் கூறினாள்.

இவ் வரலாற்றைக் கேட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் துடிதுடித்துப் போனார்கள். தருமபூஷணம், "சிவ சிவ சிவா! இவ் வநியாயம் எங்கு நடக்கும்? இதைக் கேட்கவே சகிக்கவில்லையே!—நம் ஊரில் இவ்வளவுதூரம் அக்கிரமம் பெருகி விட்டதா? சிவ பெருமானே! இக் கொடுமைகளையெல்லாம் பார்த்துக்கொண்டா இருக்கிறீர்! உமக்கு முக்கண் இருந்தும் என்ன பயன்? உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளெல்லாம் உமக்குத் தெரியாமல் நடப்பதுண்டா? அப்படி யிருக்க, துஷ்டர்கள் அக்கிரமஞ் செய்தால், அவர்களை உமது நெற்றிக் கண்ணால் எரித்துச் சாம்பலாக்கி விடவேண்டாமா? அதைவிட்டு எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுபோ லல்லவா இருக்கிறது நீர் வாளா இருப்பது?.......பாவம்! இந்தக் குழந்தை அந்தப் பாதகர்களிடம் அகப்பட்டு எப்படி துடித்ததோ! எவ்வாறு அலறியதோ! இக் குழந்தையின் களங்கமற்ற முகத்தைக் கண்டும் அப் பாதகர்களுக்கு இதைத் துன்புறுத்த வேண்டுமென்று எப்படித்தான் மனம் வந்ததோ! தெரியவில்லையே!...............அடாடா! பஞ்சமா பாதகர்கள்! கல்நெஞ்சக் காதகர்கள்!..........'' என்றுகூறிக் கண்ணீர் வடித்தார். தருமபூஷணத்தின் இரக்க நெஞ்சத்தைக் கண்ட காங்கிரஸ் தலைவர்கள் அவரை மனதினுள் வியந்து பாராட்டினர்.

தருமபூஷணம் வெளிப்புறத்தைக் கபடக் கண்களால் நன்ருய் ஆராய்ந்து பார்த்து, அப் பெண்ணைத் துரத்தி வந்த கூட்டத்தினர் யாரும் இல்லை என்று அறிந்து கொண்டார். ஆகவே, அவர் முன்னையினும் அதிகமாகத் தடபுடல் செய்யத் தொடங்கி, “அங்கே யாரது! டேய் முருகா! நம்ம ஆட்களைக் கூப்பிட்டு, வெளியே இருக்கும் அந்தத் துன்மார்க்கக் கூட்டத்தைப் பிடித்துப் பிணைத்துக் கட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு போகச் சொல்; சீக்கிரம்” என்று கூவினர். உடனே முருகனும் சில விநாடிகளுக் கெல்லாம் நாலைந்து ஆட்களோடு வெளியே ஓடினன். வெளி வாயிலில் யாரும் இல்லாது போகவே, எஜமானது அந்தரங்கத் தன்மையையும், குறிப்பையும் நன்கு அறிந்து வைத்திருப்பவனை முருகன், வலப்பக்கமும், இடப் பக்கமுமாகச் சிறிதுதூரம் ஓடிப் பார்ப்பது போல் அபிநயஞ் செய்து விட்டு ஆட்களுடன் மாளிகைக்குத் திரும்பினன். கடைசியாக அவன் தருமபூஷணத்தின் முன் வந்து, “யாருமில்லிங்க, எஜமான்! அந்தத் துஷ்டன்கள் ஓடிப் பூட்டாங்க போலேருக்கு!” என்று மிகத் தாழ்மையாகக் கூறினன்.

உடனிருப்பவர்கள் காதுகளில் நன்ருகக் கேட்கும்படி ‘சிவ சிவ’ என மனனஞ் செய்து கொண்டிருந்த தருமபூஷணம் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, “அப்படியா! சரி; அவர்கள் எங்கே தப்பி ஓடிவிடப் போகிருர்கள்; பார்க்

கிறேன்.—அதிருக்கட்டும். நம்ம வள்ளியம்மாளைக் கூப்பிட்டு இந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு போகச் சொல்லு. அம்மா இதற்கு வேறு உடையும் உணவுங் கொடுக்கட்டும்.........." என்று கூறி உத்தரவிட்டார்.

முருகன் உள்ளே விரைந்து சென்றான். இதனிடையே அப்பெண் தருமபூஷணத்தை நன்றியறிதலோடு நோக்கி, "ஐயா, தங்களுக்குச் சிரமம் வேண்டாம். நான் இப்படியே என் வீட்டுக்குப் போய் விடுகிறேன். வேண்டுமானால் எனக்குத் துணையாக ஒரு ஆளை அனுப்பிவைத்தால் நலமாயிருக்கும். தாங்கள் என்னிடம் காட்டிய கருணைக்கு மிகவும் நன்றியுடையவளா யிருப்பேன்.........." என்று மெல்லிய குரலில் கூறினாள்.

இதற்குள் காங்கிரஸ் தலைவர்கள், "ஏன்? நம்ம காரில் வைத்து இந்தக் குழந்தையை அனுப்பினால் என்ன?.........." என்று பரிவோடு கேட்டனர்.

தருமபூஷணம் தலையை யசைத்து, "அதெல்லாம் வேண்டாம்.—இந்தக் குழந்தை நம் மாளிகையிலேயே இருக்கட்டும்.—இவ்வளவு தூரம் துணிந்து காரியஞ் செய்த துஷ்டர்கள் இனியும் சும்மா இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆதலால் அவர்களைப் பிடித்து அவர்கள் கொட்டத்தை அடக்கிய பின்னர்தான்.........." என்று கூறி வருகையில், வள்ளியம்மாள் அங்கு வந்து, "வா அம்மா! உள்ளே; அம்மாள் உன்னைப்

பார்க்க ஆவலாயிருக்கிருர்கள்" என்று கூறி அப் பெண்ணின் கையைப் பிடித்து அழைத்தாள்.

இவ்வளவு தூரம் தன்மீது பரிவு கொண்டு அவர்கள் தன்னை அழைக்கும்போது தான் மறுப்பது சரியல்லவென்று எண்ணிய அப்பெண் நாணத்தோடு தலை குனிந்து வள்ளியம்மையுடன் உள்ளே சென்ருள்.

அப்புறம், தருமபூஷணம் காங்கிரஸ் தலைவர்கள் பக்கந் திரும்பி, "மன்னிக்கவேண்டும். தங்களை வெகு நேரம் தாமதிக்க வைத்து விட்டேன்.—வாருங்கள்; உள்ளே போகலாம்" என்று கூறினர்.

"பரவாயில்லை...." என்று கூறிக் கொண்டே அவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். தருமபூஷணத்திற்கு அவர்களைச் சீக்கிரம் அனுப்பிவிட்டு உள்ளே போய் அப்பெண்ணைப் பற்றிய தகவலை யறிய வேண்டுமென்று ஆவலுண்டானதால், உடனே தம் மேஜை யறையிலிருந்த செக் புத்தகத்தை யெடுத்து 500 ரூபாய்க்கு ஒரு செக்கை எழுதிக் கொடுத்தார். அத்துடன், "ஏதோ அடியேனது சக்திக்கு இயன்றது இது; பல துளி பெரு வெள்ளம் என்பர் பெரியோர். தாங்கள் திரட்டும் பெரிய தொகையில் இது ஒரு சிறு துளியாக இருக்கட்டும். ஆனல் இவ்வடிமை பெயரை மட்டும் பிரஸ்தாபித்து எதிலும் வெளியிட வேண்டாம்..........." என்று கடைசி வார்த்தையை அழுத்தி, உபசார மொழியுங் கூறினர்.

"அப்படி யெல்லாம் சொல்லப்படாது. தங்கள் போன்ற பெரியார்களுடைய பெயர் வெளி வந்தால்தான் மற்றவர்களும் முக்கியமாகச் செல்வந்தர்கள் நன்கொடை யளிப்பார்கள். அத்துடன் கர்னன் போன்று பெருங்கொடையாளி யான தங்கள் பெயர் உலகமெங்கணும் பரவிப் பிரகாசிக்க வேண்டாமா!....மகாத்மா விஜயத்தின் போது தாங்கள் தஞ்சாவூருக்கு அவசியம் எழுந்தருள வேண்டும். நாங்கள் முன்னதாகவே தங்களுக்குத் தகவல் தெரிவித்து அழைப்பும் அனுப்பி வைக்கிருேம்.........ஹும்; நாங்கள் சென்று வருகிருேம். மற்றும் பல பிரமுகர்களைப் பார்க்க வேண்டும். நாங்கள் இன்னும் தாமதித்திருப்பது தங்களுடைய நன்முயற்சிக்கும் இடைஞ்சலா யிருக்குமென்று கருதுகிருேம். ஆதலால், தயவு செய்து எங்களுக்கு விடை தாருங்கள்" என்று காங்கிரஸ் தலைவர்கள் பேசினர்கள்.

"தங்கள் போன்ற பெரியார்க ளெல்லாம் தேச விடுதலைத் தொண்டுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வரும் போது அடியேன் எம்மாத்திரம்? தங்களோடு அளவளாவி யிருப்பதே பெரும் பாக்கிய மல்லவா?..................ஏன்? தாங்கள் இன்று எங்கள் குடிசையில் தங்கி யிருந்து அமுதுண்டு நாளை செல்லலாமே!" என்று வெகு விநயமாக மொழிந்தார்; ஆயினும் தருமபூஷணத்தின் மனம் அவர்கள் எப்போது அவ்விடத்தை விட்டுப் போவார்கள் என்றே பதைபதைத்துக் கொண்டிருந்தது.

"இருக்கட்டும்; அதற்கென்ன? இன்னொரு முறை வருகிறோம். இன்றைக்கே நாங்கள் தஞ்சாவூர் திரும்பவேண்டும். அதிக அலுவல்கள் இருக்கின்றன....நாங்கள் சென்று வருகிறோம்" என்று தஞ்சாவூர் ஜில்லா காங்கிரஸ் தலைவர் கூறித் தம் நண்பர்களுடன் காரில் சென்றார்.

அவர்கள் காரில் ஏறியதுமே, தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளை விரைந்து உள்ளே சென்றார். கூடத்தில் அவர் கண்ட காட்சி அவரைத் திகைக்க வைத்தது. அவரது மனைவியார் பார்வதியம்மாளும் குழந்தைகளும் அப் பெண்ணோடு அளவளாவிக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கு முன் ஏழ்மை நிலையில் பரிதாபகரமாக விளங்கிய அப் பெண் இப்போது ஒரு சீமாட்டியின் புதல்வி போல் விளங்கினாள். பார்வதியம்மாள் ஒப்பனை செய்த செயற்கை யழகினால் இயற்கையழகு ஒளி பெற்று அவள் ஒரு கந்தர்வப் பெண்போல் திகழ்ந்தாள். "நாம் சிறிது நேரத்திற்கு முன் பார்த்த ஏழைப்பெண்தானா இவள்?' என்று அவர் அதிசயித்தார். 'வறுமையிலேயே பிறந்து வறுமையிலேயே வளர்ந்த ஒரு பெண்ணுக்கு இத்துணை பேரழகு எங்கிருந்து வந்தது?' என அவர் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். சில விநாடிகளுக்குள் அப் பெண்ணுக்குச் செய்ய வேண்டியன செய்து உபசரிக்கும் தம் மனைவியின் சமயோசித அறிவைப் பாராட்டினார். தம் குழந்தைகளிரண்டும் அவளிடம் அன்பாக அளவளாவுவதைக் கண்டு பூரித்தார். ஆயினும் தாம் அப்

பெண்ணிடம் பேச அவர்கள் இடைஞ்சலாயிருக்கி ருர்களே என்று எண்ணி அவர் கோபங் கொண் டார்.

பிறகு தம் மனதிற்குள் ஒரு சூழ்ச்சி செய்து கொண்டு, தம் மனைவி முதலியவர்கள் இருக்கு மிடத்தை அவர் அணுகியவராய், "என்ன பார் வதி! அந்தக் குழந்தைக்கு ஏதேனும் உண்ணக் கொடுத்தாயா?............" என்று கேட்டார்.

"உணவளிக்காமலா இதுவரையில் இருப் பேன்?" என்று பதிலளித்தாள் பார்வதியம்மாள்.

தருமபூஷணம் அப் பெண்ணைக் கடைக் கண்ணுல் கவனித்துக் கொண்டே, "உனக்கு நடந்த சமாச்சாரந் தெரியுமோ! பாவம்! குழந்தை யைப் பரம துஷ்டர்கள்......." என்று கூறிக் கொண்டு வருகையில், பார்வதியம்மாள் "எல்லாம் இந்தக் குழந்தை சொல்லியது; கேட்கவே பரிதாபமா யிருக்கிறது..........தக்க மனுஷாள் பாதுகாப்பு இருந்தால் அந்தப் போக்கிரிகள் இவ்வளவு துணிவாகக் காரியஞ் செய்வார்களா? —இந்தக் குழந்தைக்குத் தாய் இல்லையாம். சிறு போதிலேயே இறந்து விட்டாளாம். தகப்பனுர் மிகவும் வயோதிகராம். அவர் ரயிலில் ஏதோ வேலையி லிருந்தாராம். வயதாய் விட்டதால் இப் போது உபகாரச் சம்பளம் கிடைத்து வருகிற தாம். அது மிகவும் சொற்பமானதாலும் குடும்பக் கடன் இருப்பதாலும், இரண்டு கறவைப் பசுக்களை வைத்துக் கொண்டு, வாடிக்கைக்காரர்

களுக்குக் கறந்துவிட்டு மீதியைத் தயிராக்கியும் மோராக்கியும் ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு போய் விற்று விட்டு வருவதுண்டாம். இந்தக் குழந்தையும் தகப்பனுருக்கு உதவியாக இருந்து வந்ததாம். சமீபத்தில் அவர் நோய் வாய்ப்பட்டிருந்ததால், இக்குழந்தையே தந்தை வேலை யெல்லாம் கவனித்து வந்ததாம். இவ்விதம் தனியாய்ப் போய் வந்த காலத்தில்தான் துன் மார்க்க வாலிபர் சிலர் இக்குழந்தையை வழி மறித்து துன்புறுத்தியிருக்கின்றூர்கள். இதற்கு முன் பும் இருமுறை அத்துஷ்டர்கள் இக்குழந்தையைப் பின் தொடர்ந்து ஏதேதோ வாயில் வந்தவாறு பேசி யிருக்கிறூர்களாம்........" என்று தான் அப் பெண்ணிடம் அறிந்த வரலாற்றை யெல்லாம் தன் கணவரிடம் விவரித்துக் கூறினுள்.

"ஐயோ பாவம்! அப்படியா? இவ்வளவு நல்ல குழந்தையின் தலையில் பிரமன் எவ்விதம் எழுதியிருக்கிறுன், பார்! நல்ல சுகமனுபவிக்க வேண்டிய இளமைப்பருவத்தில் இந்தக் குழந் தைக்கு என்ன கஷ்டம்?.........குழந்தாய்! உன் பெயர் என்ன அம்மா?.........." என்று தரும பூஷணம் அப் பெண்ணைக் கூர்ந்து கவனித்த வாறே கேட்டார்.

"என்னை இராதை என்று கூப்பிடுவார்கள்" என்று இனிமையாகக் கூறினுள் அப்பெண் தலைகுனிந்த வண்ணமே.

"நல்ல பெயர்.........!" என்றூர் தருமபூஷணம்.

"இராதை படித்துக்கூட இருக்கிறாளாம். பாட்டும் பாடத் தெரியுமாம்......" என்றாள் பார்வதியம்மாள்.

"பேச்சிலிருந்தே தெரிகிறதே, நன்றாகப் படித்த பெண்ணென்று......."

"இராதையை நம் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கவும் கண்காணித்துக் கொள்ளவும் அமர்த்திக்கொண்டு நம் வீட்டிலேயே வைத்துக்கொண்டாலென்ன ?......."

"ஆமாம் அப்பா! அக்காவை இங்கியே இருக்கச் சொல்லப்பா! அது வூட்டுக்குப் போவணும்னு அவசரப்படுதுப்பா!......" என்று கொஞ்சிக் கேட்டாள் தருமபூஷணத்தின் ஏழு வயதுப் பெண்ணான காமாட்சி.

"இந்த அக்காவை நான் விடவே மாட்டேம்மா!......" என்று கூறி ராதையைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான் சிவகுமாரன் என்ற நான்கு வயதுச் சிறுவன்.

"நான்தான் அப்போதே தீர்மானம் பண்ணிவிட்டேனே; இந்தக் குழந்தையை நம் வீட்டிலேயே வைத்துக்கொள்வதென்று......பார்வதி! குழந்தை நிரம்பவும் அலுத்துப்போயிருக்கிறது. அதற்குத்தனியறையொன்று கொடுத்துச் சிறிது இளைப்பாறச் சொல்லு......." என்றார்.

தருமபூஷணத்தின் குடும்பத்தார் தன்னிடம் காட்டும் அன்பைக் கண்டு இராதை மனம் நெகிழ்ந்தாள். கண்களில் நீர் ததும்பியது. அதரம்

துடிக்க அவள், "என் தந்தை என்னைக் காணாது கவலைப்பட்டுக்கொண்டிருப்பார். நான் போய்.... ..." என்று கூறி வருகையில், தருமபூஷணம், "ஆமாம். அதை நான் மறந்தே போய்விட்டேன். நீ இரு. நான் உன் தந்தைக்கு ஆளனுப்பி அழைத்து வரச் சொல்கிறேன்........" என்றார்.

இச்சமயத்தில் முருகன் வந்து, "எஜமான், வெளியில் யாரோ ஒரு பெரியவர் வந்திருக்கிறார்... ...." என்றான்.

இதைக் கேட்டதும் தருமபூஷணத்தின் முகம் மாறுதலடைந்தது.

"யாரது !...." என்று கடுகடுத்தவாறு தருமபூஷணம் கேட்டார்.

"ஒருவேளை என் தந்தையா யிருக்கலாம்......." என்றாள் இராதை துடிதுடிப்போடு.

"ஓஹோ ! அப்படி யிருக்கலாம். முருகா ! உடனே போய் அழைத்துக்கொண்டு வா !.........." என்று கட்டளையிட்டார் தருமபூஷணம்.

## தந்தையும் மகளும்

வழுக்கை விழுந்த நரைத்தலை; சுருங்கிய முகம்; எலும்பும் தோலுமான தேகம்; கூனின முதுகுடன் கூடிய ஒருவர் தடி ஊன்றியவாறு நடந்து தருமபூஷணத்தின் முன்வந்து நின்றார். அவர் வரும்போதே, "என் மகள் எங்கே? என் கண்மணி எங்கே?........" என்று ஆவலோடு கேட்டுக்கொண்டே வந்தார்.

தருமபூஷணம் முகத்தில் சந்தோஷத்தை வருவித்தவாறு, "வா, பெரியவரே; உன் பெண் இங்குதான் இருக்கிருள்................" என்று கூறிக் கொண்டு வருகையிலேயே இராதை தன் தந்தையைக் கண்டதும் நாணத்தை உதறிவிட்டு, "இதோ இருக்கிறேன் அப்பா!" என்று கூறிய வண்ணம் ஓடோடியும் வந்து அவரைக் கட்டிக் கொண்டாள். அவளை அறியாமலே கண்களில் நீர் ததும்பியது. கிழவரும் மகளது முகத்தைத் தன் முகத்துடன் வைத்துப் பொறுமினர். இப் பரிதாபக் காட்சி தருமபூஷணத்தின் மனைவி, மக்களுடைய உள்ளங்களை நெக்குருக வைத்தது. தருமபூஷணத்துக்கோ உள்ளுக்குள் எரிச்சல் உண்டாயிற்று. கிழவர் வருகை இவர் கொண்டிருந்த எண்ணத்தை மண்ணாக்குவதாக இருந்தது. ஆகவேதான், 'யாரோ ஒரு பெரியவர் வந்திருக்கிருர்' என்றதுமே அவர் சீறி விழலானர். தாம் குறுக்கே நின்ருல், அப்பெண் நாணத்தால் ஒரு பக்கமாகவே இருப்பாள்; தாம் கிழவரிடம் பக்குவமாகப் பேசிப்

பெண்ணை மட்டும் இங்கேயே இருக்ும்படி செய்து, அவரை அனுப்பி விடலாம் என்று கருதிய அவரது எண்ணத்துக்கு மாருக, இராதை நடந்து கொண்டதைப் பார்த்தால் அவருக்கு ஆத்திர முண்டாகாமல் என் செய்யும்? ஆனல் அவர் தம் ஆத்திரத்தை வெளிக்குக் காட்டவில்லை. அவ்விதஞ் செய்தால் அவரது ஆஷாடபூதித்தனம் வெளியாய் விடுமல்லவா!

பிறகு, கிழவர் தன் பெண்ணின் கூந்தலை நீவிக் கன்னத்தைத் தடவிக் கொடுத்தவாறு தரும பூஷணம் பக்கந் திரும்பி, "ஐயா, நீங்கள் என் பெண்ணுக்குச் செய்த உதவியை என்றும் மறவேன். உங்கள் குழந்தைகளைக் கடவுள் காப்பாற்றுவார். நீங்கள் யாதொரு குறைவுமின்றித் தீர்க்காயுளோடு வாழ்வீர்கள்..............நாங்கள் சென்று வருகிறோம். தயவுசெய்து எங்களுக்கு விடை கொடுங்கள்........................" என்று உருக்கமாகக் கேட்டார்.

தரும பூஷணத்தின் முகத்தில் ஏமாற்றங் காணப்பட்டது. எனினும், அவர் தம்மைச் சமாளித்துக் கொண்டு, "பெரியவரே, நிற்கிறீர்களே! இப்படி உட்காருங்கள். ஏன் இவ்வளவு அவசரம்? .........குழந்தை இங்கேதான் இருக்கட்டும். துஷ்டர்கள் இதன்மேல் கண் போட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. ஆதலால் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். சில நாள்வரை உங்கள் பெண் எங்கள் குழந்தைகளோடு ஒன்ருக இருந்து விட்டுப் போகிறது! (தன் மனைவியை நோக்கிவிட்டு) நம்ம வீட்டி

லுள்ளவர்கள் இவ்விதந்தான் அபிப்பிராயப் படு கிறார்கள். ஏன்? நீங்களும் கூட இங்....கே....யே இ....ரு....க்....க....லா....மே....!........" என்று கடைசி வார்த்தையை மட்டும் இழுத்தாற்போல் கூறினர். அழுத்திச் சொன்னால் எங்கே கிழவரும் இங்கேயே இருந்து விடுவாரோ; அவர் இருந்தால் இராதை யைத் தனியாகச் சந்தித்துத் தன் அந்தரங்க ஆசை யைத் தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படாது போய்விடுமோ என்ற அச்சமே அவரது இழுப் புக்குக் காரணமாகும்.

கிழவர் கண்களில் நன்றியறிதலை வெளிப் படுத்தியவாறு, " ஐயா, நீங்களும் உங்கள் குடும்பத் தாரும் ஏழைகளாகிய எங்கள்மீது கொண்டி ருக்கும் பேரன்புக்கு, எங்கள் தோலைச் செருப் பாகத் தைத்துக் கொடுத்தால் கூட ஈடாகாது.... ..............தாங்கள் சொல்லுவது வாஸ்தவம். என் மகளுக்குத் தொந்தரவு கொடுத்த துஷ்டர்கள் மீது, நம் ஊர்க் காங்கிரஸ் தலைவர் ராஜசேகர ஐயா தக்க நடவடிக்கை யெடுத்துக் கொண்டி ருக்கிறார். அவர் இருக்கும்வரை எங்களுக்குப் பய மில்லை. அவர் ஊரிலிருந்தால் இவ்வித அசம்பா விதம் ஏற்பட்டே இராது. அவர் திரும்பிவந்ததும், இத்தகவலைக் கேள்விப்பட்டுத் துடிதுடித்துப் போனர். பின் அவர், நடந்ததைத் தீர விசாரித்து அறிந்து போலீஸுக்குப் புகார் செய்தார். அவர்தான் என் பெண் உங்கள் மாளிகையில் இருப்பதையுந் தெரிவித்து, உடனே போய் அழைத்துவரும்படி கட்டளையிட்டார். அவர்மிக நல்ல பிள்ளை. ஊருக்கு உழைக்கும் உத்தமர் என்

ருல் அவருக்குத்தான் தகும்'' என்று நீளக்கூறிக் கொண்டே வந்தார்.

ராஜசேகரன் என்றதுமே தருமபூஷணத்தின் முகம் கருகியது. மேலும் அக்கிழவர் அவன் தான் கூறி யனுப்பினுன் எனத் தெரிவித்து அவனைப் பற்றிப் பிரமாதமாகப் பேசவும் அவருக்குத் தாங்க முடியாத வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. ஆகவே அவர் முகத்தை வேறு பக்கந் திரும்பிக் கொண்டார். கிழவர் மேலும் பேசத் தொடங்கி, "தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் வார்த்தைக்குக் குறுக்கே பேசுவதாக நினைக்கப் படாது. நாங்கள் போய் வருகிருேம். எங்களுக்கு அனுமதி கொடுங்கள்........'' என்று வணக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

தருமபூஷணம் முகத்தை ஒருவிதமாக வைத்துக் கொண்டு "உங்கள் இஷ்டம். அப்புறம் நான் என்ன செய்ய இருக்கிறது? நீங்கள் போகிருேமென்ருல் நாங்கள் தடைசெய்ய முடியுமா? என்ன!'' என்று சலிப்பாகக் கூறினுர்.

கிழவர் தருமபூஷணத்தின் முகம் போகும் போக்கைக் கண்டும் காணுதவர்போல், "இராதா! அம்மாவிடம் போய்ச் சொல்லிவிட்டு வா'' என்று தம் மகளை ஏவினுர். அதற்கு முன்பே இராதை பார்வதியம்மாளிடம் போய் தலை குனிந்தவாறு ஏதோ கூறி விடை பெற்றுக் கொண்டு குழந்தைகளை யெடுத்து முத்தமிட்டு உச்சிமோந்து கீழே விட்டாள். குழந்தைகள் அவள் கால்களைக் கட்டிக் கொண்டன. அவள் கண்களில் நீர் ததும்பியது. இவ்வுருக்கமான காட்சியைக் காணச் சகியாத

வளாய்ப் பார்வதியம்மாள் பெண் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு சிறுவனைக் கையில் பிடித்தவாறு அவ்விடத்தை விட்டு அழைத்துப் போக முயன்றாள்.

இராதையும் மெதுவாகத் தந்தையிடம் வந்து போகலாமெனத் தூண்டினாள். கிழவர் மகளுடன் வெளியேறும்போது, "ஐயா, போய் வருகிறோம்" என்று கூறினார். தருமபூஷணத்திடம் எப்படி-சொல்வதெனத் தவித்துக் கொண்டிருந்த இராதையும் தந்தையுடன் சேர்ந்து, "போய் வருகிறேன்" என்று தலை குனிந்தவாறே கூறி நடந்தாள். இதுவரை அமர்த்தலாக இருந்த தருமபூஷணம், "போய் வா, குழந்தாய்!" என்று இனிமையாகக் கூறி, அவள் செல்லும் திசையையே கண் கொட்டாது பார்த்து நின்றார். இருவரும் இவர் கண்ணுக்கு மறைந்ததும் தருமபூஷணம் தலையை யாட்டிவிட்டு, விரைந்து மேன்மாடிக்குச் சென்றார். வெகுநேரம் இவர் வருகைக்காகக் காத்திருந்த இவரது அந்தரங்க நண்பர்களை யடைந்து தருமபூஷணம், அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு, தாழ்வாரத்திற்கு அழைத்துச் சென்றார். மேன்மாடியிலிருந்து பார்த்தால் தெருவில் போகிறவர்கள் கூடுமானவரை தெரியுமாதலால், இரு பக்கமும் நோக்கிவிட்டு வடபாகமாகச் செல்லும் கிழவரையும் இராதையையும் சுட்டிக்காட்டி, அவர்கள் பின்னே சென்று அவர்கள் இருப்பிடத்தைப் பார்த்து வரும்படி கட்டளையிட்டுத் துரிதப்படுத்தி யனுப்பினார். சபாபதி என்னுஞ் சதிகாரத் தோழனும், கால் நிலத்தில் பாயாது விரைந்துசென்றான்.

## நள்ளிரவில் நரசோரம்

அன்றைய இரவு எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டாக இருக்கிறது. கிராமமே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. செடி கொடி மரங்கள் மட்டும் காற்றினால் பேயாடுவதுபோல் பயங்கரமாக ஆடிக் கொண்டிருந்தன. பேயும் கண்ணுறங்கும் நள்ளிரவில் கும்பிருட்டில் நாலைந்து மனிதர்கள் இராதையின் வீட்டை அணுகிக் கொண்டிருந்தனர். தாங்கள் நடப்பதனால் எவ்விதமான சந்தடியும் ஏற்படாதவாறு அவர்கள் மெதுவாக அடிமேலடி வைத்தும் எச்சரிக்கையாகவும் சென்றனர். அவர்கள் இராதையின் வீட்டை யணுகியதுமே, சுவற்றோரம் நின்று உள்ளே ஏதேனும் ஓசை கேட்கிறதா வென உற்றுக் கவனித்தனர்; பின்னர் அவர்களில் ஒருவன் அவ்வீட்டைச் சுற்றி ஒருமுறை வலம் வந்து தலைவனாக உள்ள மனிதன் காதில் என்னமோ இரகசியமாக ஓதினான். அதற்கு அவன் மற்றவனிடம் ஏதோ கூறினான். அதன்படி, அவன் மீண்டும் அவ் வீட்டின் பின்புறஞ் சென்று இடிந்து கிடந்த மதிலின் மீதேறி ஓசைபடாது உள்ளே குதித்தான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற் கெல்லாம் அவ் வீட்டின் வெளிப்புறக் கதவு மெள்ளத் திறக்கப்பட்டது. உடனே ஒருவன் தவிர மற்றவர்கள் உள்ளே சென்றனர். வீட்டுக் கூடத்தில் கயிற்றுக்

கட்டிலொன்றின்மீது கிழவர் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தார். இம் மனிதர்கள் சில விநாடிகள் கிழவரை நின்று கவனித்து ஏதோ முடிவுக்கு வந்தவர்களாய் அவரது வாயைப் பொத்தித் துணியால் இறுகக் கட்டி, கைகால்களைக் கயிற்றால் பிணைத்துக் கட்டி விட்டனர். இவர்களது செயலால் உறக்கம் கலைந்த கிழவர், விழித்தெழுந்திருப்பதற்குள் கட்டி உருட்டப்பட்டாராதலால் மனத்தில் திகில் கொண்டு செயலற்றுக் கிடந்தார். அதன் பின்னர், அம் மனிதர்கள் எதிர்ப் புறத்திலுள்ள ஒரு அறையில் நுழைந்தனர். அங்கு தான் இராதை கிழிந்த பாயொன்றில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். வந்தவர்கள் அவளையும் வாயைப் பொத்தித் துணியால் அடைத்துக் கைகால்களைக் கயிற்றால் கட்டினர். பிறகு அவர்கள் அனைவரும் சேர்ந்து அவளைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தனர். வெளியே காவலிருந்தவனும் இவர்களோடு கலந்து கொண்டான். அதே சமயத்தில் ஒரு மோட்டார் ஓசையின்றி இவர்கள் இருக்குமிடத்துக்கு வந்தது. அதில் இராதையைக் கிடத்தி விட்டு அனைவரும் அதில் ஏறிக் கொண்டனர். கடைசியாகக் கார் தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளையின் மாளிகையை நோக்கிச் சென்றது..

மறுநாள் ஊரெங்கும் ஒரே அமளியாயிருந்தது. பால்காரக் கிழவர் வாசுதேவப் பிள்ளையின் ஒரே மகள் இராதை இரவோடிரவாய்க் கடத்தப்பட்ட சமாச்சாரமே எல்லார் வாயிலும் அடிபட்டது. 'அவள் எப்படிக் காணமற் போனள்? யார் கடத்திக்கொண்டு சென்ருர்கள்?' என்று

ஊரார் ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டனர் 'இதென்ன, அக்கிரமமாய் இருக்கிறதே! ஊரே கெட்டுப் போச்சு! இந்த அநியாயம் எங்கு நடக்கும்? இவ்வளவு தைரியமாய் யார் இப் பெண்ணை அபகரித் திருப்பார்கள்?—ஒரு வேளை இவளை வழி மறித்துக் கேலி செய்தார்களே, அந்தத் துஷ்டப் பயல்களாயிருக்குமோ!'' என்றெல்லாம் பேசிக் கொண்டனர்.

மறுநாள் காலை முதன் முதலாக இராதை வீட்டை யடைந்தவன் இராஜசேகரனே. அவன் வீட்டில் நுழையும்போதே வாசுதேவப்பிள்ளை கட்டப்பட் டிருப்பதைக் கண்டு அலறியோடிப் போய் அவிழ்த்து விட்டான். நீண்ட நேரம் வாயடைத்துக் கைகால் கட்டப்பட்டுக் கிடந்ததால், கிழவர் சர்வ நாடியும் ஓய்ந்து போயிருந்தார். உடம்பு மரத்திருந்தது. அந் நிலையிலும் அவர் "ராஜா, வந்தாயா அப்பா!..........." என்று பெரு மூச்சு விட்டவாறே கேட்டு, இரவு நடந்த சமாச்சாரத்தை யெல்லாஞ் சொன்னார். அவர் கூறிய விவரத்திலிருந்து சந்திர சேகரனுக்கு எஞ்சி யிருந்த சந்தேகமும் பறந்து போய் விட்டது. இராதையை யாரோ கடத்திச் சென்று விட்டார்கள் என்று அவன் நன்றாகத் தெரிந்து கொண்டான். இராதை களவாடப்பட்டாள் என்று அறிந்ததுமே, ராஜசேகரன் துடி துடித்துப் போய்விட்டான். ஒரு கணம் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

பின்னர், சிறிது தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப்

போய்த் தகவலைக் கொடுத்தான். உடனே போலீஸ் புலிகள் சம்பவம் நடந்த வீட்டுக்கு விரைந்து வந்து சம்பிரதாயமான சோதனையும் விசாரணையும் நடத்தினர். ஏற்கனவே, நோயாலும் மகள் பிரிவாலும் வாடியிருந்த கிழவரை அவர்கள் பல கேள்விகள் கேட்டுத் தொல்லை கொடுத்து விட்டனர். இதற்குள் சந்திரசேகரன் தன் சிநேகிதர்கள், சகா தொண்டர்களை யெல்லாம் கூட்டிக் கொண்டு ஊரெல்லாம் இராதையைத் தேட ஆரம்பித்தான். அவனுக்கு வழிமறித்த போக்கிரிப் பயல்கள் மீது சந்தேகமே உண்டாகவில்லை. ஏனென்றால், அவர்கள் கெட்டவர்களானாலும் இவ்வளவு துணிகரமாகவும், சாமர்த்தியமாகவும் காரியத்தை நடத்த முடியாது என்ற நிச்சயம் தான். ஆனால் அவன் மனத்தில் இடையிடையே தருமபூஷணத்தின் நினைவு சம்பந்தமின்றித் தோன்றிக் கொண்டிருந்தது. தருமபூஷணத்தோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் அவனுக்கு ஏற்படாவிடினும் அன்னவரது அந்தரங்கத் திருவிளையாடல்களைப் பற்றியும் வெளிவேடத்தைப் பற்றியும் ஏராளமாகக் கேள்விப் பட்டிருந்தான். ஆனால், “இவ்வளவு பெரிய மனிதர் இவ்வளவு கேவலமான செயலில் ஈடுபடுவாரா?” என்று அவன் எண்ணலானான்.

## சண்டாளன் செய்த சதி

இந் நிலையில் போலீஸார் ஊரெல்லாஞ் சுற்றி உளவறிய முயான்றும் ஒன்றும் பயன் படாததால், தாங்கள் ஏதாயினுஞ் செய்து தீர வேண்டுமே என்ற தொந்தரவில், இரண்டு நாட்களுக்கு முன் இராதையை வழிமறித்துத் தொந்தரவு செய்த போக்கிரி வாலிபர்களைப் பிடித்து லாக்கப்பில் அடைத்தனர். 'காக்கைஉட்காரப்பனம்பழம் விழுந்தது' என்ற பழமொழிக்கு இணங்க, அத் துஷ்டர்களின் முந்தைய செயல் போலீஸார் கேஸ் ஜோடிப்பதற்குப் பெரிதும் உதவியா யிருந்தது. ஆனால் இதில் போலீஸாருக்கு ஒரு சங்கட மிருந்தது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விட்டதாகப் பாவனை செய்வது சரிதான்; ஆனால் இராதை எங்கே? அவ்வாலிபர்கள் கடத்திச்சென்றிருந்தால் அவள் அவர்கள் வசமன்றோ இருக்கவேண்டும்? அவர்களிடம் அவள் காணப் படவில்லையே! போலீஸார் தங்கள் கைவரிசைகளை யெல்லாம் உபயோகப் படுத்தி அவர்களிடம் வாக்குமூலம் வாங்கியும், அவளைக் கண்டு தாங்கள் விரும்பியதுண்டே யொழிய, கடத்திச் செல்ல வில்லை யென்றும், அவள் இப்போது எங்கே இருக்கிறாள் என்று தங்களுக்குத் தெரியா தென்றுமே, அவர்கள் கடைசிவரை கூறினர். எனவே போலீஸார் இவர்களைச் சிறைசெய்த தால்மட்டும்பயனில்லை. இராதையைக் கண்டுபிடிக்க

வேண்டியது மிக முக்கியமாகும். இல்லாவிடில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் போய் விழிக்க வேண்டி வருமே என எண்ணினர். குற்றவாளிகள் இராதை யைச் சுலபமாக யாரும் கண்டுபிடிக்க முடியாத ஓரிடத்தில் சிறை வைத்திருக்கிருர்க ளென்ருே, அல்லது தூர தேசத்துக்கு அவளைப் பிறர் உதவி கொண்டு வெளியேற்றி விட்டார்க ளென்ருே, கூறிச் சாதித்து விட்டால் போகிறது என்ற அசட் டுத் தைரியமும் போலீஸார் கொள்ள லாயினர். முன்னுள் இத் துஷ்டர்கள் இராதையைத் துரத் திச் சென்ற காலத்தில் தருமபூஷணம் சந்திரசே கரம் பிள்ளை அவளுக்குப் புகலிடம் கொடுத்துக் காப்பாற்றினுர் என்ற செய்தியை அவர்கள் கேள் விப்பட்டிருந்தன ராதலால் எதற்கும் அவரிடம் போய் இராதை காணுமற்போன செய்தியைப் பிரஸ்தாபித்தால் அவர் என்ன சொல்கிருர் எனப் பார்ப்போம்? கூடுமானுல், அவரையும் தாங்கள் ஜோடிக்கும் வழக்கில் சம்பந்தப்படுத்திச் சாட்சி சொல்ல அழைக்கலா மென்றும் அவ்வூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எண்ணினுர். எனவே, அவர் தாம் மட்டும் தருமபூஷணத்தைப் போய்ப் பார்ப்பதெ ன்று தீர்மானித்து, தமது மோட்டார் சைக்கிளில் அவரது பங்களா நோக்கிப் புறப்பட்டார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சென்ற சமயத்தில் தருமபூஷணம் தமது சகாக்களோடு அந்தரங்க அறையில் ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றித் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். சர்க்கிள் இன்ஸ் பெக்டர் அவரைக் காண வந்திருக்கிருர் என்று,

வேலையாள் முருகன் சொன்னதும், தருமபூஷணம் திடுக்கிட்டுப் போய்விட்டார். அவரை அறியாமலே அவரது தேகம் நடுங்கியது. அவரது சகாக்களும் காரணமறியாது பயந்தனர். என்ன இருந்தாலும் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத் தானே செய்யும்! கடைசியாகத், தருமபூஷணம் தம்மை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, தமது சகாக்களுக்கு ஒருவிதச் சைகை காட்டிவிட்டுக் கீழே இறங்கி முன்னே இருந்த வரவேற்பு அறைக்குச்சென்றார். அடுத்த கணம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உள்ளே அழைக்கப்பட்டார். இன்ஸ்பெக்டர் உள்நுழைந்ததும், தருமபூஷணம் தாம் செல்வந்தர் என்ற பெருமிதத் தோரணையிலேயே புன்சிரிப்பினால் அவரை வரவேற்றார். தமக்குச் சமீபத்தில் வந்த பிறகுதான், "வாருங்கள்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர்வாள்! என்ன விசேஷம்? இவ்வளவு தூரம் வந்தது.... ..........."என்று அமர்த்தலாகவே வரவேற்று உபசரித்தார். போலீஸாருக்கு இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவார்கள் என்பது அவருக்குத் தெரியும். அதனால்தான் சாதாரணமாக மற்றவர்களிடம் காட்டும் பணிவும், குழைவான பேச்சும்கூட இவரிடங் காட்டவில்லை. போலீஸாரிடம் தமக்குக் காரியம் ஆகவேண்டுமென்றால், அப்போது அவரது பேச்சும் செயலுமே வேறுவிதமாக இருக்கும். அத்துடன் வெள்ளையப்பனைத் தட்டினால் எல்லாக் காரியமும் எளிதில் நடந்துவிடும் என்பது அவரது திடமான நம்பிக்கை. எட்டி எட்டிய வரை பாய்ந்தால், பணம் பாதாளம் வரையிலும் பாயுமல்லவா!

முதலில் சிறிது நேரம் இருவர்களிடையும் லோகாபிராமமாகப் பேச்சு நடந்தது. பின்னர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தாம் எந்நோக்கத்தோடு வந்தாரோ அதைப் பற்றி மெதுவாகப் பிரஸ்தாபிக்கத் தொடங்கி, "மூந்தாம் நாள் தாங்கள் தஞ்சமளித்தீர்களே! அந்த யாதவப் பெண், அவள் கடத்திச் செல்லப்பட்ட விஷயம் தங்களுக்குத் தெரிந்திருக்கு.........." என்று ஆரம்பித்தார்.

தருமபூஷணம் இடைமறித்து? "ஆகா! தெரியாமலா, என்ன அக்கிரமம்? ஊரில் வர வர அட்டூழியம் அதிகரித்து வருகிறதே.......!" என்று கூறினர். எங்கு போலீஸாராகிய தாங்கள் இருந்தும் ஊருக்குப் பிரயோசனமில்லை என்று தருமபூஷணம் முடிவு கட்டிவிடப் போகிறாரோ என்ற அச்சத்தால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு, "ஒன்றுமில்லை; இரண்டொரு துஷ்டர்கள் இருந்து ஆர்ப்பாட்டஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பிடித்துக் கொட்டடியில் அடைத்து விட்டோம். இனி ஊரில் ஒரு தொந்தரவும் ஏற்படாது......." என்று தங்கள் சாமர்த்தியச் செயலைப்பற்றிக் கூறினர்.

"யாரைப் பிடித்திருக்கிறீர்கள்?........"

"அதுதான் அன்று இராதையை வழி மறித்துத் துரத்தினர்களே அந்த அயோக்கிய வாலிபர்களை! ஆனல், அவர்கள் இராதையை எங்கு சிறை வைத்திருக்கிருர்கள் என்ற விஷயந்தான் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை."

இத்தகவலைக்கேட்டதும், தருமபூஷணம் மனத்தில் குடி கொண்டிருந்த பீதி ஒருவாறு நீங்கியது; அவரது சூழ்ச்சி மிக்க மூளை மிகத் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது. அவர் சில விநாடிகள் எதைப்பற்றியோ யோசித்துக் கடைசியில் ஒரு வித முடிவுக்கு வந்தவராய், இன்ஸ்பெக்டரை நோக்கி, "யாரை அரெஸ்ட் செய்திருக்கிறீர்கள்? அந்த அப்பாவிப் பயல்களையா?—அட பாவமே!" என்று வியப்பை முகத்தில் தோற்றுவித்தவராய்க் கேட்கலானார்.

தருமபூஷணத்தின் ஆச்சரியமும், கேள்வியும் இன்ஸ்பெக்டரைத் திகைக்கச் செய்தன. "தாங்கள் கூறுவதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லையே!" என்று இழுத்தாற்போல் கேட்டார்.

"ஒன்றுக்கும் உபயோகமற்ற அந்தப் பயல்களா இவ்வளவு துணிகரமான காரியத்தைச் செய்திருப்பார்கள் என்றே யோசிக்கிறேன். அவர்கள் போக்கிரிகளா யிருக்கலாம். ஆனால் ......"

"ஆனால் என்ன?"

"அவ் வாலிபர்கள் இராதையைக் கடத்திச் சென்றிருக்க முடியாது என்பதுதான் என்னுடைய திடமான அபிப்பிராயம். என் கருத்து மட்டுமல்ல, ஊரிலுள்ளவர்களும்........."

"ஊரார் என்ன கூறுகின்றனர்?"

"ஊரார் இச் சம்பவத்தைப்பற்றி வேறு விதமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள் என்பது என் காதில் விழும் விஷயங்களிலிருந்து தெரிகிறது."

"வேறு விதமாக என்ன? இவ் வாலிபர்கள் இக்காரியத்தைச் செய்யவில்லை என்றால் வேறு யார் செய்திருக்க முடியும்? வேறு யார் செய்ததாக ஊரார் அபிப்பிராயப் படுகிறார்கள்?—போலீஸாராகிய எங்களுக்குத் தெரியாத விஷயம் அவர்களுக்கு அதிகம் தெரிந்து விட்டது போலும். அப்படியானால் அவர்கள் வந்து உளவு சொல்வது தானே! குற்றவாளியைக் கண்டு பிடித்துக் கொடுப்பதுதானே!" என்று இன்ஸ்பெக்டர் உத்தியோக தோரணையில் ஆத்திரங் காட்டிப் படபடவெனப் பேசலானார்.

"ஏதேது! இன்னுங் கொஞ்சம் போனால் உண்மை இன்னதெனக் கூற வரும் என்னைக்கூட குற்றவாளியைக் கண்டு பிடித்துக் கொடுக்கும்படி கேட்பீர் போலிருக்கிறதே! இன்ஸ்பெக்டரவாளுக்கு ஏன் இவ்வளவு படபடப்பு?" எனத் தரும பூஷணம் சிரித்தவாறே பேசலானார்.

"இல்லை; இல்லை. அப்படியெல்லாம் நினைக்கப்படாது. நாம் நடந்த சம்பவம் எதையாகிலும் பற்றி விசாரிக்கப்போனால், இந்த ஊரார் ஒன்றுங் கூற முன் வருவதில்லை. பின்னாலோ வம்பளக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதை நினைக்கும்போது கோபம் வரத்தான் செய்கிறது" என்று இன்ஸ்பெக்டர் தமது ஆத்திரத்துக்குச் சமாதானங் கூறலானார்.

"நடந்ததைக் கூறுவார்கள்; ஆனால் நீங்கள் உளவு கூறுபவர்களைச் சந்திக்கு இழுத்துவிடுவீர்

களே என்ற பயம்தான் ஊராருக்கு; வேறு இல்லை. உதாரணமாக இந்த நரசோரக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட ஆளைப் பற்றி நானே தகவல் கொடுக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்? என்னைக் கோர்ட்டுக்கு இழுக்காமல் விடுவீர்களா?'' என்று கூறி, தருமபூஷணம் மெள்ள ஒரு கேள்வியை உள்ளே நுழைத்தார்.

"அப்படி யெல்லாம் கண்டபடி தங்கள் போன்ற பெரியவர்களைச் சம்பந்தா சம்பந்தமின்றி இழுத்து விட மாட்டோம். நான் இன்று தங்களை நாடி வந்ததன் நோக்கமே இச்சம்பவத்தைப் பற்றித் தங்கள் வாயிலாக உளவறியவும், இக் கேஸுக்குத் தங்கள் உதவியைப் பெறவுமே தான். ஆதலால், தாங்கள் தயவுசெய்து தங்களுக்குத் தெரிந்த விஷயத்தைத் தாராளமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இராதையைக் கடத்திச் சென்ற குற்றவாளி யார் என்கிறீர்கள்?'' என்று சாதுரியமாகக் கேட்டார். இன்ஸ்பெக்டருக்குத் தருமபூஷணத்தைத் தம் வலையில் போட்டு விட்டதாக எண்ணம். ஆனல், தருமபூஷணமோ இவருக்குக் குல்லா போட்டு, தம் எண்ணத்தைச் சாதிக்கப் பார்க்கிருர்.

"நான் கூறவில்லை; என் அபிப்பிராயமில்லை. ஊரார் கூறுவதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அதை என் அபிப்பிராயமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்'' என்று தருமபூஷணம் முதலில்

பீடிகை போட்டுக் கொண்டு, "காணுமற்போன இராதைக்கும், இந்த ஊர் பிரபல காங்கிரஸ் காரன் என்று சொல்கிறார்களே ராஜசேகரன், அவனுக்கும் கள்ள நட்பு உண்டாம். சில காலமாக அவர்கள் இரகசியமாகக் காதல் திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்தார்களாம்.—சிவசிவா! அதை வாயில் சொல்லவே நாவெழ மாட்டே னென்கிறது! என்ன செய்கிறது! சொல்லித் தொலைய வேண்டி யிருக்கிறது.—இவர்களது சோர நட்பு கிழவனுக்குத் தெரிந்து விட்டதாம். அவன் இருவரையும் வெகுவாகக் கோபித்துக் கொண்டு, இராஜசேகரனை இனித் தன் வீட்டுக்கு வர வேண் டாமென்றுங் கண்டிப்பாகக் கூறி விட்டானும். அதனுல் தான், இராஜசேகரன் நீங்கள் இப்போது பிடித்து வைத்திருக்கும் பயல்களைக் கொண்டு இராதையை வழி மறித்துத் தூரத்தும்படி ஏற்பாடு செய்தானும். இதன் வாயிலாக அக் கிழவனைப் பயமுறுத்த எண்ணியதோடு, அடுத்துச் செய்யப் போகும் காரியத்துக்கு முன்னேற்பாடாகவும் இக் காரியத்தைச் செய்தானும். கடைசியாக, நேற்று இராதையைக் கிழவனுக்குத் தெரியாமல் கடத்திச் சென்று இரகசியமாக ஓரிடத்தில் வைத்து விட்டு, ஒன்றுந் தெரியாதவன் போல் அனைவருக்கு முன்னே அநுதாபங் காட்டி நாடகம் நடத்த ஆரம் பித்து விட்டானும். பெண்ணை வெளியூருக்கு எங் கோ ஆட்கள் உதவியோடு அனுப்பி விட்டா னென்று கூறப்படுகிறது. இதெல்லாம் ஊரார்

கூறும் பேச்சு" என்று தாம் கட்டிய பொய் மூட்டையை மெள்ள அவிழ்த்து விட்டார்.

இத்தகவல் இன்ஸ்பெக்டரைத் தூக்கி வாரிப் போட்டது. இராஜசேகரனைப் பற்றித் தருமபூஷணம் கூறத் தொடங்கிய போதே திடுக்கிட்டுப் போய் விட்டார். கடைசியாக அவனே இராதையைக் கடத்திச் சென்று மறைத்து வைத்திருக்கிறானெனக் கூறியதும், அவர் வியப்பைத் தாங்க மாட்டாமல், "என்ன சொன்னீர்கள்? இராஜசேகரனா இராதையைக் கடத்திச் சென்றான்? உண்மையாகவா? இத்தகவலை யார் கூறியது?" எனக் கேட்டார்.

இன்ஸ்பெக்டரது ஆச்சரியத்தையும் சந்தேகத்தையுங் கண்டு தருமபூஷணத்தின் முகத்தில் அசடு தட்டியது. "என்ன மிஸ்டர், இன்ஸ்பெக்டரவாள்? நான் சொன்ன விஷயத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா? என்ன!—அது தான் நான் முதலிலேயே இவ்விஷயத்தை உங்களிடங் கூறக் கூடாதென்று இருந்தேன். நீங்கள் வற்புறுத்திக் கேட்டதன் மீது நான் கேள்விப் பட்ட விஷயத்தைக் கூறினேனே யொழிய, வேறில்லை. மற்றப்படி, எனக்கு இதில் என்ன கருமசிரத்தை? ............ஹும்; ............. ஆனால் நான் கூறிய விஷய மென்னவோ முற்றிலும் உண்மையானது. அதை நீங்களல்ல; வேறு யார் வந்தாலுஞ் சரி; மறுக்க முடியாது..........." என்று சிறிது அழுத்தமாகக் கூறிவிட்டு இன்ஸ்பெக்டரைக் கடைக்கண்ணால் பார்த்தார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ ஒன்றுந் தோன்ருதவராய், தலை குனிந்தவண்ணம் வாளா உட்கார்ந்திருந்தார். அவரது சுருங்கிய நெற்றியும் கீழ்நோக்கிய பார்வையும் அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிருர் என்பதைத் தெரிவித்தது. அவர் பூட்ஸ் கால்களைத் தரையில் தட்டிய வண்ணமிருந்தார்.

தமது கபடக் கண்களால் இன்ஸ்பெக்டரது முகத்தைக் கூர்ந்து ஆராய்ந்தவாறிருந்த தருமபூஷணம் தமது தொண்டையை ஒருவிதமாகக் கனைத்துக்கொண்டு, "சிவ சிவ சிவா! அர அர சம்போ மகாதேவா!" என்று உச்சரித்து விட்டு, "இன்ஸ்பெக்டர்வாள் ஏதோ யோசனையி லிருக்கிருப்போலிருக்கிறது. ஆமாம்; இம்மாதிரி விஷயங்களெல்லாம் தீர்க்கமாக ஆலோசனை செய்து பார்த்து முடிவுக்கு வரவேண்டியவைகள் தாம்; அதில் சந்தேகமில்லை........... ஆனல், இராஜசேகரனது பூர்வ சரித்திரத்தை நினைவுபடுத்திக்கொண்டால், அவன் எதுவுஞ் செய்யக்கூடிய நெஞ்சுத் துணிவுள்ளவன் என்பதை அறிவீர்கள்......................... அவன் சிறு பொழுதிலிருந்தே தத்தாரியாய்த் திரிந்தவன். அந்தக் காலத்தில்—அதாவது சட்டமறுப்புப் போராட்டக் காலத்தில்-தன்னுடன் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு கடலோரத்தில் போய் உப்புக் காய்ச்சியும், கள்ளுக்கடைகள் முன்பும், விதேசி ஜவுளிக்கடைகள் முன்பும் நின்று மறியல் செய்தும் கலாட்டா செய்து உங்களுக்கெல்லாம் எவ்வளவு தொல்லை கொடுத்தான்? நீங்களெல்லாம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்

கென்றே மேன்மை தங்கிய சக்கரவர்த்தியால் நிய மிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும் லட்சியஞ் செய்யாது, அவன் உங்களைப் பற்றி யெல்லாம் பாமர மக்களிடையே கேவலமாக்கூறியும் தூஷித்தும் பிரசாரஞ் செய்தான் என்பதை நீங்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. அக்காலத்தில் உங்கள் குண்டாந் தடிகளால் பலமாக அடிபட்டும், ஜெயில் வாசஞ்செய்தும்அவனது உடம்பும் உள்ளமும்தடித்துப்போயிருக்கின்றன. ஆதலால், அவன் இதுவும் செய்வான்; இதற்கு மேலுஞ் செய்வான் என்பதை நீங்கள் உணரவேண்டும்.—நீங்கள் சந்தேகிக்கிறதுபோல் இப்பயல் இராதை விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கமாட்டான் என்றே விவகாரத்துக்கு வைத்துக் கொண்டாலும், (இவன்தான் இராதையைக் கடத்திச் சென்றிருக்கிறான் என்று ஊரார் உறுதி கூறுகிறார்கள் என்பதைப் பற்றி நான் எந்தக் கோயிலிலும் வந்து சத்தியஞ் செய்யத் தயார்.) அவன் உங்களுக்கு முன்னர் கொடுத்த தொந்தரவுக்குப் பழி தீர்த்துக் கொள்வதற்காகவாயினும், நீங்கள் இச் சம்பவத்தை வியாஜ்யமாக வைத்துக்கொண்டே அவன்மீது நடவடிக்கைஎடுத்துக் கொள்ளவேண்டும்.—ஊரிலுள்ள பெரியவர்களுக்கும் போலீஸாருக்கும் அடங்காதவனை எப்படியாகிலும் அடக்கியே தீரவேண்டும். அப்படிச் செய்தால்தான் உங்கள் போன்ற போலீஸ் அதிகாரிகளும் என் போன்றவர்களும் கிராம மக்களிடையே மதிப்போடு வாழமுடியும். எல்லாந் தெரிந்தவர்கள் நீங்கள். இதையெல்லாம் நான் சொல்

லியா தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்?'' என்று நீண்ட பிரசங்கஞ் செய்து, ''சிவ சிவ சிவா'' என்ற உச்சரிப்போடு முடித்தார்.

தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளை இவ்விதம் சர்க்கிள் இன்ஸ்பெக்டரைத் தூக்கி வைத்துப்பேசி, இராஜசேகரன் ஒரு உண்மையான காங்கிரஸ்காரன்; தேச ஊழியன் என்ற முறையில் சட்டமறுப்புக் காலத்திலும் அதன் பின்னரும் செய்து வந்த பொதுஜனசேவையைப் போக்கிரித்தனமான காரியம் என்று கூறி, அவனை அடக்க வேண்டுமென்று யோசனை சொன்னதும், இன்ஸ்பெக்டர் மூளையில் பெருமித உணர்வு உதித்தது. ஏற்கனவே, சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும், தங்களைத் துச்சமாக மதித்து நடக்கும் இராஜசேகரனை மட்டந்தட்டவேண்டுமென்ற எண்ணந்தான். ஆனாலும், அவன் சத்தியமும் நேர்மையும் தவறி எக்காலத்திலும் நடவாதவன்; தன்னலங் கருதாதவன் என்பதை அவர் நன்கறிந்துவைத்திருந்தார். ஆதலால்தான் அவர், தருமபூஷணம் அவனைப் பற்றிக் கூறிய தகவலைக் கேட்டுச் சிறிதும் நம்பவேயில்லை. அவன்மீது பழிதீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற போலீஸ் மனோபாவத்தோடு அவர் அவனை ஏதேனும் ஒரு விஷயத்தில் எக்கச்சக்கமாகச் சிக்க வைத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமெனப் பலமுறை எண்ணினாராயினும், 'இராஜசேகரன் படித்தவன்; விஷயந் தெரிந்தவன்; பல பெரிய மனிதர்கள் அன்பைப் பெற்றவன்; ஆதலால், தமது சூழ்ச்சியை அறிந்து வெளிப்படுத்தித்

தமக்கே ஆபத்துண்டாகும்படி செய்துவிட்டால் என்ன செய்வது?' என்று தயங்கினர். இப்போது, தருமபூஷணம் தூண்டவும், அவர் உள்ளத்தில் பழி வாங்கும் எண்ணந் தலையெடுத்தது. எதற்கும் இச் சம்பவம் சம்பந்தப்பட்ட நிலைமையைத் தீர யோசனை செய்து பார்ப்போம் என்று கருதித் தாம் அமர்ந்திருந்த ஆசனத்தை விட்டு எழுந்து கொண்டே தருமபூஷணத்தை நோக்கி, "தாங்கள் கூறியது யோசிக்கவேண்டிய விஷயந்தான்.... ஒருவேளை நிலைமை அநுகூலமாயிருந்து, இராஜசேகரன் மீது நடவடிக்கை எடுக்க நேர்ந்தால், தாங்கள், தான் எங்களுக்குப் பேருதவியாயிருக்க வேண்டும்............நான் தங்களைப் பிறகு வந்து பார்க்கிறேன். எனக்கு விடை கொடுங்கள்" என்றார்.

தருமபூஷணமும் எழுந்தவாறே, "அதற்கென்ன! அப்படியே ஆகட்டும். நீங்கள் மட்டும் இவ்விஷயத்தில் அசட்டையாய் இருந்துவிடக் கூடாது. பாவம்! இராதை ஏழைப் பெண்; அவளுக்காகவும், அவளது கிழத்தந்தைக்காகவுமாயினும் நாம் இவ்விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கத்தான் வேண்டும்.......சரி; உங்களுக்கும் வந்து வெகுநேரமாகிறது; போய் வாருங்கள்" என்று கூறி விடை கொடுத்தார். சர்க்கில் இன்ஸ்பெக்டர் தருமபூஷணத்துக்குப் போலீஸ் முறையில் ஒரு 'சல்யூட்' அடித்துவிட்டு வெளியேறினர். தம் தந்திரம் அப்போதே பலித்துவிட்டதென்று எண்ணிய தருமபூஷணத்துக்குச் சந்தோஷந் தாங்க முடிய

வில்லை. இன்ஸ்பெக்டர் காரில் ஏறி வெளிச் சென்றதும், "முட்டாள்! இவன் தான் ஊரைக் காவல் காக்கிறானும்!..........." என்று தானாகவே கூறிக் கொண்டு கலகலவென நகைத்தார். இராதையைக் கடத்திவந்ததன் காரணமாக அவருக்கு இருந்து வந்த பயம் இப்போது அடியோடு நீங்கிவிட்டது. ஒரு சாதாரண பட்டதாரியான இராஜசேகரன் விஷயத்திலேயே சந்தேகங் கொள்ளத் துணியாத இந்த இன்ஸ்பெக்டர், பெரும் பணக்காரரும், பக்திமானென்றும், கொடை வள்ளலென்றும் புகழ் வாய்ந்தவருமான தம்மைக் கனவில்கூட சந்தேகிக்க மாட்டார் என்று மனந்தேறினர். அந்தக் குதூகலத்தோடு அவர் கைகளை வீசிக்கொண்டு கம்பீரமாக நடந்து, தம் சகாக்கள் இருக்குமிடத்தை நோக்கி மாடிப்படி மீது ஏறினர்.

## இராதையின் சிறைவாசம்

இனி, நாம் இராதை எங்கிலேயி லிருக்கிறுள் என்பதைக் கவனிப்போம். இராதை யாரால் கடத் தப்பட்டாள் என்ற விஷயத்தில் போலீஸாரும், இராஜசேகரன் முதலிய மற்றவர்களும் மூளையைக் குழப்பிக்கொண் டிருந்தாலும், வாசகர்கள் இது வரை படித்த கதைப் போக்கிலிருந்து, இராதை யைக் கடத்திச் சென்றவர்கள் தருமபூஷணத்தின் கையாட்கள் என்னும் இரகசியத்தை அறிந்து கொண் டிருப்பார்கள். தருமபூஷணத்தின் சதி கார நண்பர்கள் நன்ருக அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்த இராதையை வாயடைத்துக் கால்கைகளைக் கட்டிக்கொண்டு வந்து மோட்டார் காரில் கிடத் தியதும், காரை ஓசை படாது மெதுவாக ஓட்டச் செய்தனர். பேயும் கண்ணுறங்கும் அந்நள்ளிரவில்-நிசப்தமான அச்சமயத்தில்-கார் செல்லும் சப்தத் தைக் கேட்டு, யாரேனும் எழுந்து வந்து பார்த்து விஷயத்தைத் தெரிந்து கொள்ளப் போகிருர்கள் என்ற பயமே அவர்களை அவ்விதங் காரை வெகு மெதுவாகச் செலுத்திச் செல்லச் செய்தது.

உறக்கத்தில் விஷப்பாம்பும், வன விலங்கு களுங் கூட மனிதர்களையோ, மற்ற ஜீவன்களை யோ தீண்டா; துன்புறுத்தமாட்டா என்று சொல் லுவார்கள். ஆனல், மனிதப் பாவிகளாகிய இச்சதி காரர்கள் தூக்கத்தில் எதிர்பாராதவாறு இவ் விதஞ் செய்து தூக்கிச் செல்லத் தொடங்கியதும்,

ஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் திடுக்கிட்டு விழித்துக் கொண்ட இராதை, தன் கண்முன் எமகிங்கரர் கள்போல் முரட்டு ஆட்கள் நாலைந்து பேர் இருப்ப தும், தன் வாயடைக்கப்பட்டுக் கை கால்கள் கட் டப்பட்டிருப்பதும் கண்டு மிகவும் பயந்து போனாள். யாரோ துஷ்டர்கள் தன்னைத் தூக்கிக்கொண்டு போகிறார்களென்று அவள் ஒரு நொடியில் அறி ந்து கொண்டாளானாலும், எதற்காக இவ்விதந் தூக்கிக்கொண்டு போகிறார்கள்? எங்கே கொண்டு போகிறார்கள்? என்று அறியாது அறிவு மயங்கி னாள். கூக்குரலிடவோ அத்துஷ்டர்களிடமிருந்து திமிறிச் செல்லவோ, பிறர் உதவியை நாடவோ முடியாத நிலையில் அவள் இருந்தாளாயினும், மோட்டாரில் கிடத்தப்பட்டதும், தலையையும், கை கால்களையும் இப்படியும் அப்படியுமாக ஆட்டிக் கட்டுக்களை அகற்ற முயன்று கொண்டிருந்தாள். இப்பரிதாபகரமான நிலைமையைக் காண்பவர்கள் அனலில் அகப்பட்ட புழுப்போலத் துடிதுடித்துக் கொண்டிருந்தாள் என்பதை அறிவார்கள். ஆனால், இவளைக் கடத்திய துஷ்டர்கள் இவள் படும் அவஸ் தையைக் கண்டு ஏளனச் சிரிப்புச் சிரித்தார்கள். கூடுமானவரை இராதையைத் துன்புறுத்தாம லும், தொடாமலும் கொண்டு வரவேண்டுமென் பது தருமபூஷணத்தின் கண்டிப்பான உத்தர வாதலால், அவர்கள் அவளைப் பின்புற ஸீட்டில் கிடத்தியதும், அவள் அருகே போகாமல், டிரைவர் பக்கத்தில் சிலர் உட்கார்ந்தும், மற்றுஞ் சிலர்

காரின் இருபுறங்களையும் பிடித்துத் தொத்திக் கொண்டும் சென்றனர்.

இதனிடையே தருமபூஷணம் இவர்கள் வர வை எதிர்பார்த்து, ஆவலே வடிவாகக் காத்திருந் தார். அவருக்கு ஓரிடத்தில் இருக்கை கொள்ள வில்லை. அவர் மேன்மாடித் தாழ்வாரத்தில் இப்ப டியும் அப்படியுமாக உலாவுவதும், அடிக்கடி வெளிவந்து தெருப்பக்கத்தை நோக்குவதுமாக இருந்தார். 'தம் சகாக்கள் இந்நேரம் இராதையின் வீட்டை யடைந்திருப்பார்கள்; இந்நேரம் கிழவ னைக் கட்டிப்போட்டுவிட்டு அவளை வெளிக் கடத்தி யிருப்பார்கள்; தாம் பின்னே அனுப்பிய காரில் இந்நேரம் அவளை ஏற்றியிருப்பார்கள்; இந்நேரம் அவர்கள் இராதையுடன் திரும்பி வந்துகொண் டிருப்பார்கள்' என்றெல்லாம் அவர் சிந்தித்துக் கொண்டு அவர்கள் வரும் வழிமீது தம் விழியை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரது ஆவல் உச்ச நிலையை அடையும் சம யத்தில், கார் மெதுவாக மாளிகையை அணுகியது. ஏற்கனவே செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டின்படி தருமபூஷணத்தின் அந்தரங்க வேலையாள் முருகன் வாயிற்கதவை ஓசையின்றித் திறந்து கார் உள்ளே வருவதற்கு வழி விட்டான். போனவர்கள் திரும்பி வந்து விட்டார்கள் எனக் கண்டதும், தருமபூஷ ணம் மேன்மாடியிலிருந்து கீழே ஒரு நொடியில் ஒரு குதி குதித்து, ஓடோடியும் இறங்கிவந்து அவர் களை வரவேற்றார்.

ஆட்கள வண்டியி லிருந்து இராதையை மெது வாகத் தூக்கினர். அச்சமயம், அவள் பீதியாலும் உடம்பை அலட்டிக் கொண்டதாலும் சர்வ நாடியும் ஒய்ந்துபோய் மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தாள். தருமபூஷணம் ஆள்காட்டி விரலை வாய்மீது வைத்துச்சந்தடி செய்யவேண்டாமென்று சைகை காட்டி, மேன் மாடிக்குக் கொண்டு போகச் செய்தார். தாம் அடையக் கருதியிருக்கும் பெண்கனியைப் பிறர்—தம் ஆப்தசிநேகிதர்களே யாயினும்-தொடும்படி பார்க்க அவருக்குச் சகிக்கவில்லை. ஆயினும், வேறு வழியில்லாததால் அவர்களை முன்னே போக விட்டுத் தாம் பின் சென்றார். மேன் மாடியில் பல அறைகளைக் கடந்து பின்புறங் கடைசியிலிருந்த ஒரு தனி அறைக்கு இராதை கொண்டு போகப் பட்டாள். இராதை கடத்திக் கொண்டு வரப்பட்டால், அவளைக் கண்காணிப்பதற்கும், அவளுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு மென்றே அன்று பகல் நியமிக்கப்பட்ட ஒரு பணிப் பெண் அங்கு நின்று அறையின் கதவைத் திறந்து விட்டாள். அடுத்த கணம், இராதை அவ் வறையின் ஒரு பக்கத்தில் போடப்பட்டிருந்த பஞ்சணையில் கிடத்தப்பட்டாள். உடனே ஆட்கள் அவ்விடத்தை விட்டு நீங்கினர். வெளியிலேயே நின்றிருந்த தருமபூஷணம் பணிப்பெண்ணைக் கைகாட்டி யழைத்து “கமலம், அப்பெண்ணின் கை கால்களை யவிழ்த்து விட்டு, முதலில் அவள் மூர்ச்சையைத் தெளிவித்தற்குரிய சைத்தியோபசாரங்களைச் செய். ஆனல் அவள் ஏதேனுங் கேட்

டால்மட்டும் ஒன்றுஞ் சொல்லாதே. இதமாகப் பேசி அவள் மனசை நம் நோக்கத்துக்குச் சாதகமாக்க முயற்சி செய். அவள் நம் மாளிகையில் இருப்பதாகவே அவளுக்குத் தெரியாதபடி பார்த்துக் கொள். ஒரு கணமும் அவளைவிட்டு நீங்காதே. இங்குள்ள மற்ற வேலையாட்களோடு நீ சேரக் கூடாது. இவளை நாம் கொண்டு வந்திருப்பது யாருக்குந் தெரியக் கூடாது. ஆதலால்தான் நீ மற்றவர்களோடு பேசக் கூடாதென்று கூறுகிறேன். ஏதேனும் முக்கியமாகத் தெரிவிக்க வேண்டி யிருந்தால் என்னிடம் வந்து கூறு. தெரிகிறதா!'' என்று கட்டளை யிட்டு விட்டு அகன்றார்.

கமலம் அவரது கட்டளைப்படியே இராதையின் கட்டுக்களை அவிழ்த்து விட்டுக் கை கால்களைத் தடவிக் கொடுத்து அவளுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்யலானான். இவளது சைத்தியோபசாரங்களில் இராதை மூர்ச்சை தெளிந்தாளாயினும், பயமுந் துயரமும் நீங்காது வருந்தினாள். இராதை கமலத்தை நோக்கிப் பல வித கேள்விகளைக் கேட்டாள் பயனில்லாமற் போகவே அவள்செயலற்று உட்கார்ந்துவிட்டாள். அவள் அன்ன ஆகாரங்களை மறந்தாள்; உறக்கத்தைத் துறந்தாள். தன் தந்தையை நினைத்துக் கண்ணீர் விட்டவாறே இருந்தாள். அவளது உள்ளத்தில் இராஜசேகரனது உருவமும் நடனமாடிக் கொண்டிருந்தது. தனது தற்போதைய நிலைமைக்குக் காரணமா யிருப்பவர்

யார்? அவரது நோக்கமென்ன? என்று அவள் எண்ணித் தன் மண்டையை உடைத்துக் கொண்டாள். கமலம் அவளுடன் என்னென்னவோ இதமாகப் பேசி வேளா வேளைக்கு உணவு கொள்ளும்படியும் உடை உடுத்திக்கொண்டு அலங்காரமாக இருக்கும்படியும் வேண்டிக் கொண்டாள். ஆனால் இந்த இதோபதேசங்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே ஆயிற்று. இந்நிலையில் அவளது நீர் வார்ந்த கண்களும் துயரந் தோய்ந்த முகமும் அவிழ்ந்து அலங்கோலமாகக் கிடக்கும் கூந்தலும் வாடிய மேனியும் எப்பேர்ப்பட்ட கல்நெஞ்சர் மனத்தையும் உருக்கக் கூடியதாயிருந்ததெனில், இவ்வேழைப் பெண்ணின் மனம் உருகாதிருக்க முடியுமா! எனினும், அவள் என் செய்வாள்? வயிற்றுப் பிழைப்பொன்று இருக்கிறதே! ஆகவே அவள் தான் கற்ற வித்தையையெல்லாம் கையாண்டாள். அவை இராதையிடம் பலிக்காது போகவே, அவள் தருமபூஷணத்தண்டை போய் உள்ள நிலைமையைக் கூறலானாள்.

ஆகவே, தருமபூஷணம் சிறிது யோசனையில் ஆழ்ந்தார். தன்னைக் கொண்டுவந்து வைத்திருப்பவர் யாரெனத் தெரியாததால் இராதை இவ்விதங் கவலையோடிருக்கலாம்; தாம்தான் அவளை விரும்பிக் கொண்டுவந்து வைத்திருப்பதாக அறிந்தால், ஒருவேளை அவளது மனம் மாறக்கூடும் என அவர் நம்பினர். ஆதலால், அவரே அன்று மாலை நேரில் சென்றார். இவர்

வரவை யறிந்ததும் பணிப்பெண் கதவைத் திறந்துவிட்டு வெளியே சென்ருள். தருமபூஷணம் புன்முறுவல் பூத்த முகத்துடன் இராதை இருக்கு மிடத்தை யணுகினர்.

கவலேயோடு தலே குனிந்து யோசனேயி லாழ்ந் திருந்த இராதை காலடி யோசை வாயிலாக யாரோ தன்னே யணுகுவதாக உணர்ந்ததும், திடுக் கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். தருமபூஷணத்தைக் கண்ணுற்றதும் முன்னேயினும் அதிகமாகத் துணு க்குற்று, துடிதுடிப்போடு எழுந்தவாறு, "யார், நீங்களா? ..........." எனக்கேட்டாள். எதிர்பாரா அதிர்ச்சியால் அவள் நாக்குழறியது.

இச் சமயத்தில் அவ்வறையின் தெற்கேயுள்ள ஜன்னல் வாயிலாக ஒரு உருவம் தலேயை நீட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஒதுங்கி நின்றது.

"ஆம்; கண்ணே! நான் தான்...." என்று தருமபூஷணம் கூறியவாறு அசட்டு நகை புரிந்து ஒய்யாரமாக நடந்து அவளே அணுகினர்.

இராதைக்குத் தருமபூஷணம் பிள்ளேயி னுடைய பேச்சின் தாத்பரியம் புரியவில்லே. எனவே அவள் படுபாதாளத்தில் விழுந்து தவிக்கும் ஒருவன், ஒரு துரும்பு கண்ணுக்குப் பட்டாலும் அதைப் பற்றுக்கோடாகக் கொண்டு கரையேற முயல்வது போல், தருமபூஷணம் தன்னேக் காப்பாற்றவே வந்திருக்கிருரென்று எண்ணிப் பேராவலோடு, "ஆ! நீங்கள் தானு? என்னே முன் போக்கிரிப் பயல்களிட மிருந்து

காப்பாற்றிய தருமப் பிரபு நீங்கள் தானு? மீண்டும் பேராபத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் என்னைக் காப்பாற்றத்தானே வந்திருக்கிறீர்கள்? ஆமாம்; நான் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? யாரோ துஷ்டர்கள் என்னைக் கடத்திக் கொண்டுவந்து இங்கு சிறைப்படுத்தி யிருப்பதை எவ்விதம் அறிந்தீர்கள்?........" என்று கேட்டாள்.

தருமபூஷணம் புன்சிரிப்புக் கொண்டவராய், "இராதா! உன்னைக் காப்பாற்றவே நான் வந்திருக்கிறேன். அதில் சந்தேகமென்ன? உன் போன்ற இளம் பெண்களைக் காப்பாற்றுவது என் போன்ற பிரபுக்களுக்குக் கடமையல்லவா! அழகிய பெண்ணுன உனக்கு—தக்க மங்கைப் பருவம் வாய்த்த உனக்கு—மன்மதன் மலர்க்கணையால் ஏதேனும் ஆபத்து நேரும் என்பதை யறியாமலிருப்பதற்கு நான் என்ன அவ்வளவு மடச்சாம் பிராணியா? அந்தக் காலத்தில் கோகுலத்து இராதையை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா மீட்டுச் சென்று இன்பமளித்தது போல், நானும் உன்னை அல்லலிலிருந்து காப்பாற்றி இன்பமளிக்க வந்திருக்கிறேன்" என்று தமது கருத்தை மெள்ள வெளிப்படுத்தினர்.

இராதைக்குத் தருமபூஷணத்தின் வார்த்தை ஒவ்வொன்றும் புதிராகவே தோன்றியது. அவர் என்ன சொன்னுரென்பது அவளுக்குச் சரியாக விளங்கவில்லை. "உன்னைக் காப்பாற்றவே வந்தி

ருக்கிறேன்" என்ற ஒரு வார்த்தையே அவளது அப்போதைய நிலைக்கு ஆறுதலைத்தருவதா யிருந்த தாகையால், அவள் தருமபூஷணத்தைப் பரிதாபமாக நோக்கி, "பிரபு உங்கள் கருணையை என்னென்பது? பரம தயாளுவான உங்களுக்கு ஏழையாகிய என்னால் என்ன கைம்மாறு செய்யமுடியும்? ஆனால் என்னை இத் துன்பத்தினின்றும் காப்பாற்றுவீர்களானல், ஏழேழ் பிறவியிலும் உங்கள் நன்றியை நான் மறவேன். ஐயா, சீக்கிரம் என்னை இவ்விடத்தினின்றும் வெளியேற்றுங்கள். என்னைச் சிறை வைத்திருக்கும் துஷ்டர்கள் ஒருவேளை வந்தாலும் வரக் கூடும். அப்புறம் என்னால் உங்களுக்குங் கஷ்டம் நேரப் போகிறது? சீக்கிரம்; சீக்கிரம்..................." என்று கூறித் தனது துடிதுடிப்பை வெளிப்படுத்தினள்.

"இராதா! பயப்படாதே! இனி உனக்கு ஒன்றும் நேராது. நான் இருக்கும்போது எந்தத் துஷ்டனும் இங்கு தலைகாட்ட மாட்டான். எவனுக்கும் அவ்வளவு தைரியம் வாராது. — இவ்விடத்தை நமது இடமாகவே நினைத்துப் பயத்தையொழி.—ஆமாம்; நான் என்னமோ உனக்குப் பிரமாதமாக உதவி செய்து விட்டதாகவும், அதற்குப் பதிலாக நீ ஒன்றும் எனக்குச் செய்ய முடியவில்லை யென்றும் எல்லாம் கூறினயே! அது என்ன! அதிருக்கட்டும். நான் உன்னை ஒன்று கேட்கிறேன். உன்னால் எனக்கொரு உதவி ஆகவேண்டி யிருக்கிறது- அதை நீ செய்ய முடியுமா? ..........." என்று மெள்ளக் கேட்டார்.

இராதை ஆச்சரியந் தாங்க மாட்டாதவளாய், "என்ன ! என்ன !! என்னுலா ? ஏழையாகிய என்னுலா? உங்களுக்கு உதவியா?........" என்று படபடப்பாக வினவினுள்.

தருமபூஷணம் முன்னிலும் அணுக்கமாக இராதையை நெருங்கி, "ஆமாம் ; என் தங்கமே ! உன்னுல் தான் எனக்கு ஒரு உதவி ஆகவேண்டியிருக்கிறது. அதைச் செய்ய உன்னுல் முடியும். ........" என்று கூறினுர்.

"என்னுல் முடியுமா ? பேதைப் பெண்—அதிலும் பரம ஏழைப் பெண்ணுகிய என்னுலா ?" என மீண்டும் வியப்போடு கேட்டாள்.

"ஆம், அஞ்சுகமே! உன் ஒருத்தியால் தான் அவ்விஷயத்தில் எனக்கு உதவி செய்ய முடியும்........"

"அது என்ன ? என்னுல் உங்களுக்கு ஏதேனும் செய்ய முடியுமாளுல், என் உயிரைக் கொடுத்துஞ் செய்யத் தயாராயிருக்கிறேன். என் உயிரினுஞ் சிறந்த மானத்தை ஒரு முறைக்கு இரு முறை காப்பாற்றிய உங்களுக்கு......."

"அப்படிக் கேள். சொல்லுகிறேன். என்னை ஒரு துஷ்டன் சதா துன்புறுத்திக் கொண்டிருக்கிறுன். அவனை அடக்க உன்னெருத்தியால் தான் முடியும்.

"உங்களை—செல்வப் பிரபுவாகிய உங்களையுமா ஒரு துஷ்டன் துன்புறுத்துகிறுன்? ஆள் அம்

பெல்லாம் உங்களுக்கு ஏராளமா யிருக்க அவனை அடக்க என்னால்தான் முடியும் என்கிறீர்களே? அவர்களாலெல்லாரும் முடியா தென்றால் என்னால் மட்டும் எப்படி முடியும்? நீங்கள் சொல்வது வெகு விசித்திரமா யிருக்கிறதே!......"

"ஆமாம். நான் கூறுவது உண்மை. பணம் ஆள் அம்புகளெல்லாம் இருந்து என்ன பயன்? அவையெல்லாம் என் எதிரியிடம் ஒன்றுஞ் செல்லாது. அழகிய இளமங்கையாகிய உன்னால்தான்.... ஏன்? உன்னால் முடியாதென்று சந்தேகப்படுகிறாய்? அன்று தேவர்களாலும் மூவர்களாலும் சண்டை செய்ய முடியாத—ஏன்? ஸ்ரீ கிருஷ்ண பகவானால் கூடத் தொலைக்க முடியாத—நரகாசுரனைச் சத்தியபாமா வீழ்த்த வில்லையா?........"என்று தருமபூஷணம் பேசலானார்.

இராதைக்கு அவர் கூறுவது ஒன்றும் புரியவில்லை யாகையால் மௌனஞ் சாதித்தாள்.

தருமபூஷணம் இராதையின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு, "இராதைக் கண்ணே! என் விரோதி மற்றவர்களுக்கு உள்ள விரோதிகளைப் போல் சாதாரணமானவனன்று. மறைந்து நின்று சண்டை செய்வதில் கெட்டிக்காரன். எத்தனை ஆட்களைக் கொண்டு அவனைப் பிடிக்கச் செய்தாலும், எதிரில் வராமலே எல்லோரையும் எய்த்து விடுகிறான். என் கண்களுக்குப் புலப்படாம லிருந்தே தன் கரும்பு வில்லால் மலர்க்கணைகளை எய்து என் தேகத்தைச் சல்லடைக் கண்

களாக்கித் தகிக்கச் செய்து, நான் துன்புறு வதைக் கண்டு சந்தோஷித்து வருகிறுன். அக் கொடியன் என் கண்ணுக்கு அகப்பட்டால் என்ன செய்வேன் தெரியுமா? அவனை என்ன பாடு படுத்துவேன் தெரியுமா? அவனுக்கு உருவமிருந் தால் தானே எனக்கு அகப்படுவான்? அந்தப் பேடிப்பயல் ஒரு அநங்கன். இந்த லட்சணத்தில் அவனுக்கு ரதிதேவி என்பவள் மனைவியாம். வஸந் தன் (வஸந்தகாலம்) ஒரு மதி மந்திரியாம். தென் றற் காற்று தேராம். பசுங்கிளி வாகனமாம். எவ் வளவு தடபுடல் பார்த்தாயா?—நீ என்னுடன் மட்டும் சேர்ந்தால் அந்த மன்மதனுடைய கொட் டத்தை ஒரு கணத்தில் அடக்கி விடலாம். என்ன சொல்லுகிறுய்? இராதா!........'' என்று தமது கபடக்கருத்தை அலங்காரச் சொற்களால் ஒரு வகையாக வெளியிட்டார்.

இப்போதுதான் இராதைக்கு உண்மை நிலை புலப்பட்டது. ஆகவே, அவள் வியப்புந் திகைப் பும் ஒருங்கே கொண்டவளாய்ச் செவியைப் பொத் தியவாறு, "சிவசிவசிவா! நீங்களா இப்படிப் பேசுவது? உங்கள் வாயிலிருந்தா இவ்வித ஆபாச வார்த்தைகளை நான் கேட்கிறேன்? நான் கனவு தான் காண்கிறேனு அல்லது உண்மையிலேயே....'' என்று படபடப்போடு பேசிக் கொண்டே போனுள்.

இதற்குள் தருமபூஷணம் அவளை மிகவும் சமீ பித்து அவளது முகவாய்க்கட்டையைத் தம் கரத் தால் பிடித்து, "ரதியே! கனவல்ல; உண்மை

தான். நான் மட்டுமல்ல; முற்றுந் துறந்த முனி வனு யிருந்தாலுங்கூட பேரழகியான உன்னைக் கண்டானுனல், தன் நிலைகுலைந்து உன் அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்து, துறவறத்தை உதறித் தள்ளிவிட்டு உன் பின்னே வந்து விடுவான். உன் கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நின்று உனக்கு அடிமையாகவுந் தயாராய் விடுவானென்பது திண்ணம். ..........ஆதலால் கண்ணே! நீ பிணக்குச் செய்யாது உன் காதலுக்குக் கையேந்தி நிற்கும் என்னைக் கட்டித் தழுவி ஒரு முத்தங் கொடுப்பாயாக !.......'' என்று கெஞ்சலானுர்.

இராதை அவரது கரந் தீண்டப் பெற்றமாத்திரத்தில் துணுக்குற்று உடல் நடுங்கி ஒதுங்கி நின்று, "ஐயோ! இதென்ன அநியாயம்? உற்ற வயதையடைந்த ஒரு பெண்—அதுவுங் கலியாணமாகாத ஒரு பெண்ணின்முன் கூறக்கூடிய வார்த்தைகளா இவை? எனக்குத் தந்தை போலுள்ள நீங்கள் என்னிடம் இவ்விதம் வார்த்தையாடலாமா? இது தகுமா? இது முறையா? இது தருமந்தானு?..." என்று கூறி அயர்ந்தாள்.

தருமபூஷணம் காம வெறி தலைக்கேறியவராய், "முறையாவது? தருமமாவது? இதையெல்லாம் யார் கண்டார்கள்? நல்ல கனி வகைகள் கிடைத்தால், அவைகளைச் சாப்பிடலாமா? கூடாதா? என்ரு ஒருவன் யோசிப்பான்? அவ்விதம் மீனமேஷம் பார்த்துக் கொண்டிருப்பவன் மடையனுகவோ பைத்தியக்காரனுகவோ தான்

இருப்பானன்றி, புத்தியுள்ளவனாக இருக்கமாட்டான். அதுபோலப், பெண் கனியாகிய உன்னைக் கண்ட பின்னர், அதைப் புசியாது தரும நியாயம் பார்த்துக் கொண்டிருக்க எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கவில்லை. இராதா, கடைசியாக ஒரு வார்த்தை கூறுகிறேன். நீ சும்மா வேதாந்தம் பேசி வீண் பிரலாபம் செய்து கொண்டிருப்பதால் பலனொன்றும் ஏற்படாது. என் விருப்பத்திற்கிணங்கினால் உன்னை என் வீட்டுக்கு ராணியாக்கி வைப்பேன். எனது சகல ஐசுவரியங்களுக்கும் உன்னைச் சொந்தக்காரியாக்கி வைப்பேன். உலகத்திலுள்ள பெண்களெல்லாரும் உன்னைக் கண்டு பொறாமைப்படும்படியாக மிக உன்னத நிலையில் வைத்து உனக்கு நான் அடிமையாக இருந்துவருவேன். என்ன சொல்லுகிறாய்!—நீயாக இணங்கி வந்தால் ஆச்சு; இல்லாவிடில், உன்னிடம் பலாத்காரமாக நடந்து கொண்டுதான் என் விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்ள நேரும். உனக்கு இங்கு யாரும் உதவி செய்ய வரமாட்டார்கள். நீ இங்கு இருப்பதே யாருக்கும் தெரியாது.............. ஆனால், ரோஜாப்பூ போன்ற உன்னைக் கசக்கி முகர எனக்கு மனம் வரவில்லை. நீயாகவே என் தழுவலுக்கு வந்துவிடு; ஏதோ.....” என்று கூறியவாறு இரு கைகளையும் நீட்டிக்கொண்டு அவளைத் தழுவ முயன்றார்.

இராதை சொல்ல வொண்ணாத மனப் பீதி கொண்டு அவரது தழுவலுக்கு அகப்படாதவாறு பின்வாங்கி, “அப்படியானால் நீங்கள்தானா என்

னைக் கடத்திக் கொண்டு வந்தீர்கள்?—இப்போது தானே விஷயம் விளங்குகிறது?-ஐயோ, கடவுளே! வேலியே பயிரை மேய்ந்தால், அதற்கு வேறு காவல் யார்? உனது பரம பக்தர்கள் போல் நடித்து நியாயத்தையும் தருமத்தையும் உலகில் நிலைநாட்டவே அவதாரஞ் செய்தவர்கள் எனப் பிறர் கருதும்படிகாணப்படும் இவர்களே, அந்தரங்கத்தில் இவ்வித அட்டூழியங்களைப் புரிந்து என் போன்ற ஏழைப் பெண்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதென்றால், வேறு யார்தான் எங்களுக்குப் புகலிடம்! நீறுபூத்த நெருப்புப்போல் எத்தனை பேர் இவ்வுலகில் இருந்து என்போன்ற ஏழைகளைத் துன்புறுத்தி வருகிறார்களோ! யார் கண்டார்?......." என்று கடவுளை நோக்கி முறையிடலானாள்.

தருமபூஷணம், "இராதா! நீ பேசுவது கிளி கொஞ்சுவது போலல்லவா இருக்கிறது? உன் குரல் வீணையில் மீட்டிய இனிய நாதமோ!—அதெல்லாம் இருக்கட்டும். இப்படி வா; என் கண்ணே! உன் மெல்லடி நோகப் போகிறது. பஞ்சணையில் வந்துட்கார்" என்று கூறியவாறு ஆவேசங் கொண்டவர் போல் அவள்மீது தாவி அவளைச் சேர்த்துப்பிடித்தார்.

இராதை பின்னுக்குச் சென்றவாறே அவ்வறையின் ஜன்னலோரத்தில் போய்விட்டிருந்தாளாதலால், தருமபூஷணம் கட்டிப் பிடித்ததும் தப்பியோட வழியில்லாது கூண்டில் அகப்பட்ட மான்போல் தவிக்கலானாள். தருமபூஷணமோ

அவளை இறுகக் கட்டித் தழுவி முத்தமிடத் தம் முகத்தை அவள் முகத்திற்குக் கொண்டு சென்றார். இராதை அவரது பிடியினின்று விடுபட முயன்று துடிதுடித்தவளாய்த், தன் தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்டியவாறு, "ஐயோ! உதவி! உதவி!! என்னைக் காப்பாற்றுவாரில்லையா? கடவுளே! உனக்கும் கண்ணில்லையா? இவ்வக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டும் பேசாமலிருக்கிறாயா? ஐயோ! ஐயோ!" என்று வாய்விட்டுக் கதறலானாள்.

இக்கூக்குரல் அம்மாளிகையின் பின்புறத்திலுள்ள கழனியின் வரப்பின்மீது சென்றுகொண்டிருந்த ஒரு வாலிபன் காதில்விழவே, அவன் திடுக்கிட்டுக் கூக்குரல் வந்த திசையை நோக்கலானான். சில விநாடிகளுக்குப் பிறகு, தருமபூஷணம் மாளிகையின் மேன்மாடியில் யாரோ ஒருவன் பெண்ணொருத்தியைத் துன்புறுத்த முயன்று கொண்டிருப்பது அவனது கூரிய கண்களுக்குப் புலப்பட்டது. அப்போதும் இராதைகூக்குரலிட்டுக்கொண்டிருந்தாளாதலால், அவ்வாலிபன் காதில் அது நன்றாக விழுந்தது. ஆகவே அவன் ஒன்றுந் தோன்றாமல் ஆவேசங் கொண்டவன்போல் அம்மாளிகையை நோக்கி ஓடலானான். சமீபத்தில் சென்ற பிறகே குறுக்கே உயர்ந்த மதில் மாளிகையைக் குறுக்கிட்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. எனவே அவன் ஒரு கணம் திகைத்து நிற்கலானான்.

தருமபூஷணமோ தம் பலத்தை யெல்லாம் உபயோகித்து இராதையைத் தன் மிருக உணர்ச்சிக்குப் பலியாக்க முயன்று கொண்டிருந்தார்.

இச்சமயத்தில் அவ் வறையின் கதவு தடதட வெனத் தட்டப்பட்டது. இதைக் கேட்டுத் தரும பூஷணம் திடுக்கிட்டார். வர வர கதவு பலமாகத் தட்டப்படும் சப்தம் அவரது காதுகளைத் துளைத்தது. இராதையை விடாமலே தருமபூஷணம், "யாரது! கதவைத் தட்டுவது" என்று அதட்டினர். இவ்வளவு பலமாகக் கதவைத் தட்டுவதற்கு யாருக்கு அவ்வளவு தைரியம் என்று அவர் யோசித்தார்.

"கதவைத் திறவுங்கள்; சீக்கிரம்" என்று ஒரு பெண்குரல் கேட்டது.

ஒரு மானை யடித்துத் தின்று கொண்டிருக்கும் புலி, அதற்கிடையூருக வேருெரு மிருகம் வருமானல், கோபத்தோடு சீறிப் பாய முயல்வதுபோல் தருமபூஷணமும் தமது அப்போதைய முயற்சிக்கு இடையூருக வந்திருப்பது யார்? எனத் தெரியாது ஆத்திரங் கொள்ளலானர்.

## ஆபத்தில் உதவி

அடுத்த கணம் கதவு உடைந்து விழுந்து விடுமோ என்று எண்ணத்தக்க வகையில் தட்டப் படும் சப்தம் அதிகரிக்கவே, தருமபூஷணம் அடங் காச் சினங் கொண்டவராய், இராதையைப் பிடித்த பிடியை விட்டுக் கதவை நோக்கி வேக மாய்ச் சென்ருர். கதவருகில் சென்றதும் சிறிது நேரந்தயங்கி நின்று ஏதோ யோசித்துப் பிறகு கத வைத் திறந்தார். தமது அந்தரங்க அபிலாஷை யைத் தீர்த்துக் கொள்ளும் சமயத்தில், அதற்கு இடையூருக வந்திருப்பவர் யார்? அதுவும் யாரும் வரக்கூடாதென்று கட்டளையிட்டு இருக்கும் இவ் வேகாந்த இடத்தில் யார் இவ்வளவு துணிவாக வந்தது? அவ்வளவு நெஞ்சழுத்தமும் தைரியமும் உடையவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவரை ஒரே அறையாக அறைந்துவிட வேண்டுமென்ற ஆத்திரத்தோடு கதவைத் திறந்த அவர், எதிரே நிற்கும் உருவத்தைக் கண்டதும், நெருப்பை மிதித்தவர் துள்ளிக் குதிப்பதுபோல் திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்துப் பின் வாங்கிஞர். அம்மாளி கைக்கே எஜமானரான—பெரும் பணக்காரரான அவரைத் திடுக்கிடவைத்தது யார்? அவரது மனைவி தருமபத்தினியான பார்வதியம்மாளே யாகும். அந்தம்மாள் எப்படி இங்கு வந்தாள்? ஏன் வந் தாள்? தருமபூஷணத்தின் இரகசியத் திருவிளையா

டல் தெரியுமா என்ன? ஆகா! தெரியாமலென்ன? 'புன்புலால் நாற்றம் புறம் பொதிந்து மூடினும் சென்றுதைக்கும் சேயார் முகத்து' என்றார் குமர குருபர சுவாமிகள். அதுபோலவே, நீ யொழுக்கத்தை எவ்வளவுதான் மறைத்து மறைத்து வைத்தாலும் நாளடைவில் எப்படியும் வெளிப்பட்டுப் போய்விடு மன்றோ!

பார்வதியம்மாள் கலியாணமான புதுசில் தனது கணவனுடைய ஆஷாடபூதித் தனத்தைக் கண்டு மயங்கிப் போய்ப் பெரு நம்பிக்கை கொண்டிருந்தாளானாலும்; சில நாட்களில் இவரது கபட நாடகத்தை ஒருவாறு அறிய நேர்ந்ததால், உண்மை யோக்கியதையைத் தெரிந்துகொண்டாள். எனவே அவள் தருமபூஷணத்தின் நடவடிக்கைகளைக் கூர்மையாகக் கவனிக்கத் தொடங்கினாள். அத்துடன், அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்து அவ்வப்போது தகவலைத் தனக்குத் தெரிவிக்குமாறு, அவள் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான தோழி சிவகாமியை ஏற்பாடு செய்திருந்தாள். பழைய சம்பிரதாய முறையைக் கடைப்பிடிக்கும் பெரிய குடும்பத்தில் வந்தவளானபடியால், ஒரு தமிழ்ப் பெண்மணி எப்படி யிருக்கவேண்டு மென்பதற்கு ஆதர்சம் போலிருந்து வந்த பார்வதி யம்மாள், தனது கணவர் பெண் பித்துப் பிடித்தவராய்த் திரிவதை யறிந்த பிறகும், ஆடவர்களான கணவன்மார் எவ்விதம் நடந்து கொள்வதற்கும் உரிமையுடையவர்கள்; மனைவியர் அவர்களது போக்கைத் தடுப்பது சிறிதுந் தகுதியல்லாததோடு,

அவர்களுக்குள்ள உரிமையிலுந் தலையிடுவதாகும் என்று அவள் கருதி வாளா விருக்கலானாள். மேலும், தருமபூஷணம் தம் மனைவியிடம், அதிக அன்புடையவர்போல் அபிநயித்துவந்ததும் பரிவும் இனிமையும் கலந்த பனிமொழி கூறி வந்ததும் அந்தம்மாளுக்கு ஆறுதலை யளித்து வந்தது. அத்துடன், அவர் ஆரம்பத்தில் க்ஷேத்திர யாத்திரை செய்வது, பக்கத்தூர்களிலே சென்று பிரசங்கம் புரிவது என்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு அடிக்கடி வெளியே சென்று தமது அந்தரங்க அபிலாஷையைப் பூர்த்திசெய்து வந்தார். அவ்வளவோடு நின்றிருந்தால் பார்வதியம்மாள் அவரைப் பற்றிக் கவலை கொண்டிருக்கமாட்டாள். அவரது வழியில் குறுக்கே நின்றிருக்கவும்மாட்டாள்.

நாளடைவில் மிருக வுணர்ச்சி மிதமிஞ்சிப் போய் விட்டதனாலோ, சதிகார சகாக்களின் தூண்டுதலாலோ, தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளையவர்கள் விலை மகளிர் சேர்க்கையோடு அமையாது, குல மகளிரிலும் அழகு வாய்ந்த பெண்களைக் கண்டால், அவர்களை எப்படியும் அணைய வேண்டுமென்று அவாக்கொண்டு அலையலானார். அவரது பொருளையுந் தயவையுமே எதிர்பார்த்து அவரைச் சுற்றித் திரியும் சோம்பேறிகள், இத் தகா விருப்பத்துக்குத் தூபம் போட்டுப் பொருள் பறித்து அவர் விரும்பிய பெண்களை எப்படியோ சூழ்ச்சி செய்து கொண்டு வந்து விடலாயினர்.

இவ்விதம் குலமகளிரையுங் கற்பழிக்கத் தம் கணவர் தொடங்கி விட்டார் — அதுவும் தமது மாளிகையிலேயே—என்று அறிந்ததும், பார்வதியம்மாளுக்குத் தாங்கவில்லை. அவள் மனம் பதறினள். 'கடவுளே! என் கணவன் தீயொழுக்கத்தினின்றும் விடுபட ஒருவழி செய்யலாகாதா?' என்று இறைவனை இறைஞ்சினள். அவரது தீச்செயலைத் தடுக்க ஏதாயினும் வழி செய்ய வேண்டும்; இல்லாவிடில் இது எல்லையறறுப் போய்க் கொண்டே யிருக்கும். உத்தமப் பெண்கள் கற்பின் குலைவால் வயிறெரிந்து சாபமிட்டால் தன் குடும்பமே நாசமாய்விடும் என்று அவள் கருதினள். ஆகவே, தான் அவள் கண்காணிப்பதோடு, தன் தோழியையும் தருமபூஷணத்தின் அந்தரங்க நடவடிக்கைகளைக் கவனிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தாள்.

அவ் வேற்பாட்டின்படியே இராதை கடத்தப்பட்டு வந்திருக்குஞ் செய்தியறிந்து, பார்வதியம்மாள், தன் கணவனது காமவெறிக்கு-மிருகவுணர்ச்சிக்கு—இராதையின் கற்பு பலியிடப்படு முன்னர், அவளைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று முயன்று வந்தாள். மேலும், இராதையை அவள் முன்னரே அறிந்து வைத்திருந்தாளாதலால், அவளது நல்லியல்புகள் அந்தம்மாளுடைய மனத்தைக் கவர்ந்து விட்டிருந்ததால், அத்தகைய உத்தம ஏழைப் பெண்மணியைக் காப்பாற்றுவது தனது முக்கிய கடமையாகும் என்று எண்ணி இவ் விஷயத்தில் அதிகச் சிரத்தை காட்டலானள்.

எனவே, தருமபூஷணம் கடைசியாக, இராதை சிறை வைக்கப்பட்டிருக்கும் அறைக்குச் சென்றிருக்கிறார் என்று தோழி சிவகாமி வாயிலாக அறிந்ததும், உடல் பதைத்து ஓடோடியும் மேன்மாடிக்குப் போகலானாள். தான் தன் கணவனது தனிப்பட்ட விஷயத்தில் தலையிட்டால் என்னாகும் என்பதைக்கூட அவள் யோசிக்கவில்லை. பின் விளைவு எதுவாயினும் அதைத் தாங்கவும் எதிர்த்து நிற்கவும் தயாரானாள். அம் மனவுறுதியோடேயே அவள் இராதை சிறை வைக்கப்பட்டிருக்கும் ஏகாந்த இடத்திற்குப் பரபரப்போடு வந்து அங்கு வெளியே காவலிருந்த வேலைக்காரியை அவ்விடத்தை விட்டு உடனே கீழிறங்கிப் போகும்படி விரட்டி யடித்துவிட்டுத் 'தடதட'வெனக் கதவைப் பலமாகத் தட்டலானாள். தருமபூஷணத்தின் மாளிகைக்குஞ் சொத்துக்கும் எஜமானியாய் சர்வ சுதந்தரம் வாய்ந்த ராணியாய் உள்ள பார்வதியம்மாளுக்கு அன்றி, மற்ற யாருக்கு அவ்வளவு தைரியம் வரும்?

* * *

இதனிடையே பின்புற வாயில் பக்கமிருந்து, இராதையின் கூக்குரலைக் கேட்டு ஓடோடியும் வந்த வாலிபன் நடுவே குறுக்கிட்ட மதிற் சுவரைக் கண்டு முதலில் சிறிது தயங்கி யோசித்தானாயினும், பிறகு தைரியத்தோடு ஏறிக் குதித்துக் கடந்து, மாளிகையின் உள் தோட்டத்தில் நுழைந்து இராதை நின்றிருந்த மேன்மாடி யறையை ஏறிட்டுப் பார்த்தான். அவன் மதிலேறி யுள்ளே

குதித்த சமயத்தில் தருமபூஷணம் இராதையைக் கட்டிப் பிடித்துப் பலாத்காரஞ் செய்ய முயன்றாராதலால், அவள் அபயக்குரல் அதிகரித்தது. எனவே, வாலிபன் தான் நின்ற இடத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்து அங்கு யாருமில்லாததையறிந்து, மேற்படி அறைக்கு நேரேயுள்ள சுவரின் பிடியை இலாகவமாகப் பிடித்துத் தத்தித் தத்தி மேலேறலானான். சுவரெல்லாம் காரை பூசி வழ வழப்பாக இருந்ததால் அதை ஆதரவாகக் கொண்டு மேல் நோக்கி யேறுவது மிகவுஞ் சிரமமாகவே இருந்ததாயினும், அவ்வாலிபனது தீவிர உணர்ச்சியும் ஊக்கமுமே அவனை மேலே கொண்டு சேர்த்தது என்று சொல்லவேண்டும். அவ் வாலிபன் அவ்வறையை அணுகுஞ் சமயத்திலேயே தருமபூஷணம் கதவைத் திறந்துகொண்டு ஆவேசத்தோடு வெளிச் சென்றாராதலால், அவனுக்கு ஒருவிதத்தில் சௌகரியமாயிற்று. எனவே அவன் தான் முதலில் கண்ட பெண்ணிருந்த ஜன்னலையணுகி,மெல்லத் தலையை நீட்டி எட்டிப்பார்த்தான். அப்போதும் இராதை ஜன்னல் பக்கமாகச் சாய்ந்தவாறு முகத்தை மூடிக்கொண்டு மனங் குமுறிப் பொருமிக் கொண்டிருந்தாள். தருமபூஷணம் அவளை விட்டுச் சென்று கதவைத் திறந்து வெளியேறியது, அச்சமயம் தனக்கு நேரவிருந்த மானபங்கத்தினின்றும் தப்பினோமே என்று மன ஆறுதலா யிருந்ததாயினும், அக் கொடியவன் வசமே இன்னும் சிறைப்பட்டிருக்கையில், முற்றும் தப்பியதாக எண்ண முடியாதாகையால், அடுத்த

கணம் என்ன நிகழுமோ என்று கருதி இராதை அச்சங் கொண்டாள். கதவை அவ்வளவு பலமாகத் தட்டித் திறக்கச் செய்தது யார்? எதற்காக அவ் விதஞ் செய்தார்கள்? ஒருவேளை இங்கு தருமபூஷணம் நிகழ்த்த விருந்த கொடிய செயலை அறிந்து தான் அதைத் தடுக்கவே இவ்விதஞ் செய்தார் களோ என்றெல்லாம் எண்ணிக் காரணமறியாது மயங்கினாள். முடிவில் அவள் தன் கதி என்னாகுமோ? தன்னைவிட்டுப் பிரிந்திருக்கும் தந்தையின் கதி என்னாயிற்றோ? என்று பலவாறு எண்ணி ஏங்கி அயர்ந்திருந்தாள்.

இராதையின் பரிதாப நிலையைக் கண்ட வாலிபன் மனம் பதறிப் போனான். ஆனால் தான் எதிர் பார்த்து வந்தபடி, அவளைப் பலாத்காரஞ் செய்து கொண்டிருந்த ஆசாமி காணாதது அவனுக்கு ஆச்சரியமாகவும், ஒரு விதத்தில் ஆறுதலாகவும் இருந் தது. அவ்வாலிபன் இராதையைப் பார்த்த மாதிரி அவனுக்கு அவளை ஏற்கனவே தெரிந் திருந்ததுபோல் காணப்பட்டது. "இராதா!" எனக் கூப்பிட அவன் வாயெடுத்தான். திடீரென பின்புறமிருந்து அவளைக் கூப்பிட்டால், அப் போது அவள் இருக்கும் கலவர நிலைமையில் பய ந்துபோய்க் கூச்சலிடவுங் கூடும். அதனால் காரி யம் கெட்டுப் போய்விடும். தானும் அக்கொடிய வனிடம் அகப்பட்டுக் கொள்ள நேரும் என்று யோசித்துப் பிறகு, அவன் மெதுவாக இராதை யின் தோள்மீது கையை வைத்தான். எதிர்பாராத வாறு யாரோ தன்னைத் தொடுவதை ஸ்பரிசத்

தால் உணர்ந்ததும், இராதை விதிர்ப்புற்றுக் கூச்சலிட முயன்றாள். மீண்டும் தருமபூஷணந்தான் வந்து தன்னைப் பலாத்காரஞ் செய்யத் தீண்டினரோ என்ற பயமே அவளைக் கண்களைக்கூடத் திறந்து பாராதவாறு வாய்விட்டலறச் செய்தது. ஆனால் அதற்குள் வாலிபன், தன் வலது கரத்தில் அவளது வாயைப் பொத்திக் கூச்சலிடாதபடி தடுத்துவிட்டான். ஸ்பரிச உணர்ச்சியிலிருந்து தன்னைத் தீண்டியவர் இன்னார்தான் என அறிந்து விட்டவள் போல், இராதை பீதியால் புதையுண்டிருந்த கண்களைத் திறந்து பார்க்கலானாள். “இராதா, பயப்படாதே! நான்தான்” என்ற வாலிபன் சொல் அவளுக்குக் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகத்தையும் இருந்தவிடந் தெரியாமல் விரட்டியடித்தது. எனவே, அவள் தன் வாயை மூடியிருந்த கையைப் பிடித்துக்கொண்டே ஆவலோடு வாலிபன் இருக்கும் பக்கந் திரும்பி, “ஆ! ராஜா, நீ எப்படி இங்கு வந்தாய்? நான் இங்கிருப்பது உனக்கு எப்படித் தெரியும்?—என் தந்தை எப்படி யிருக்கிறார்? எங்களை இக்கதிக்கு ஆளாகச் செய்துவிட்டு, நீ எங்கு சென்றிருந்தாய்?” என்று படபடப்போடு கேள்விப் பாணங்களைத் தொடுக்கலானாள். தன் காதலனைக் கண்டதுமே அவளையறியாது கண்களிலிருந்து நீர் ஆறாய்ப்பெருகியது. மகிழ்ச்சியும் வியப்பும் அவளைப் புதுப் பெண்ணாக்கியது. அவளுக்கிருந்த வருத்தமும் பயமும் எல்லாம் எங்கேயோ ஓடிப் போய் ஒளிந்து விட்டது.

இராஜசேகரன்—ஆம்; நம் கதாநாயகன் காங்கிரஸ் தொண்டன் இராஜசேகரன்தான்—ஆள்காட்டி விரலை வாய்மீது வைத்து, "உஸ்; இராதா, கூச்சலிடாதே! எல்லாவற்றையும் அப்புறம் பேசிக் கொள்ளலாம். உன்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்த சண்டாளன் எங்கே? அதை முன்னே சொல்" என்று கேட்டான்.

இராதை நடந்ததைக் கூறினாள். இராஜசேகரன் மேலும் துணிவும் மகிழ்ச்சியுங் கொண்டு, "அப்படியானால் அவன் வெளியேயா போய் இருக்கின்றான்? ஒருவேளை கதவுக்கு வெளியே நின்றிருக்கின்றானா? கதவைத் தட்டியது யார் எனத் தெரியுமா? எதற்காகத் தட்டினார்கள்?—திடீரென அவன் வந்தாலும் வரக்கூடும். நாம் மெல்லப் பேச வேண்டும்......." என்று கூறினான்.

"அவன் வெளிச்சென்றதுமே நான் கதவைத் தாளிட்டுக் கொண்டேன்; ஆதலால் அஞ்ச வேண்டியதில்லை" என்றாள் இராதா துடிதுடிப்போடு.

"எதற்கும் நீ சென்று கதவின் சாவித் துவாரத்தின் வழியாக வெளியே பார்த்துவிட்டு வா. அவன் வெளியே நின்றிருப்பதும், போய்விட்டதும் தெரிந்து கொள்ளலாம்" என்று இராஜசேகரன் யோசனை கூறினான்.

அதன்படியே இராதா விரைந்து சென்று சாவித் துவாரத்தின் வழியாக வெளியே நோக்கிவிட்டு ஓடோடியும் வந்தாள். "அன்ப! வெளியே தான் நின்றிருக்கிறார். அவருடன் யாரோ ஆத்திர

மாகப் பேசுகிறார்கள் ? அவரது மனைவியின் குரல் போல் இருக்கிறது. இருவரும் கோபத்தோடு தான் பேசுகிறார்கள்?'' எனப் படபடப்புடன் கூறினாள்.

உடனே இராஜசேகரன் ஜன்னலின் இரு பக்கங்களையும் பிடித்துக்கொண்டு அறையினுள் ஓசையின்றிக் குதித்தான். பிறகு அறையின் அமைப்பை ஒரு முறை கூர்ந்து கவனித்தான். அதன் பின்னர், அவன் இராதையைப் பேசாம லிருக்கும்படி சைகை செய்துவிட்டு, கதவருகில் சென்று சாவித் துவாரத்தின் வழியாக வெளியே சிறிது நேரங் கூர்ந்து நோக்கினான். அங்கு இராதை சொன்னபடி இருவர்—தருமபூஷண மும் அவரது மனைவியும்—மட்டும் இருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டு, பேச்சு சப்தம் உக் கிரமாகக் கேட்கவே, அவர்கள் என்ன பேசுகிறார் கள் அறிய ஆவல் கொண்டான். எனவே அவன் பார்ப்பதை விட்டு எழுந்து காதைச் சாவித் துவா ரத்தின் மீது வைத்து சம்பாஷணையை ஒற்றுக் கேட்கலானான். இராதையும் ஆவலோடு அவன் அருகே வந்து நின்று உற்றுக் கவனிக்கலானாள்.

"பார்வதி! என் விஷயத்தில் நீ அநாவசிய மாகத் தலையிடாதே. நல்லவிதமாகச் சொல்லுகி றேன். இதுவரை இருந்தபடியே உன் காரியத் தைக் கவனித்துக் கொண்டிரு. உன்னிடத்து நான் ஏதேனும் அன்புக் குறைவாக நடந்து கொண்டால் கேள். மற்றப்படி, இவ்விதமாக வெல்

லாம் வந்து என் வேலைக்குக் குறுக்கே நின்றால் அப்புறம் விபரீதந்தான் ஏற்படும்...........''

''அப்படியானால் உங்கள் விஷயம் வேறு; என் விஷயம் வேறா? உங்களுக்கு ஏதேனும் ஒன்று வந்துற்றால், அது என்னைப் பாதிக்காதா?—ஊர்ப் பெண்களை யெல்லாம் வஞ்சகமாகக் கொண்டு வந்து கழுத்தறுத்து அவர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டால், நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா? நீங்கள் செய்யும் அக்கிரமம் நம் மக்களைப் பாதிக்காமற் போகுமா? யாரேனும் கற்புடைப் பெண்கள் வயிறெரிந்து சாபங் கொடுத்தால் நம் குலம் நாசமாய்ப் போகாதா...........?

''பார்வதி! நான் சொல்கிறேன், இவ்விடத்தைவிட்டுப் போகிறாயா? இல்லையா? இன்னமும் பேசத் தொடங்கினால் அப்புறம்...........'' என்று தருமபூஷணம் ஆத்திரத்தோடு முழங்கியது உள்ளிருந்த இராதையைக் கிடுகிடாய்க்கச் செய்ததாயினும், பார்வதியம்மாளைச் சிறிதும் அசைக்கவில்லை.

## மனைவியின் புத்திமதி

**பா**ர்வதியம்மாள், "நீங்கள் என்ன தான் கூச்சல் போட்டாலுஞ் சரி; என்னைக் கொன்று போட்டாலுஞ் சரி; இந்த இராதையை இப்போதே இவ்விடத்தினின்றும் வெளியேற்றி அவளது தந்தையிடம் ஒப்படைக்காதவரை நான் இவ்விடத்தை விட்டு அப்படி இப்படி நகரவே மாட்டேன்" என்று தாங்க முடியாத ஆத்திரத்தோடு உறுதியாகக் கூறினாள். பரம சாது போல இருந்துவந்த இந்த அம்மாளுக்கு இவ்வளவு தூரம் தைரியமும் ஆத்திரமும் எங்கிருந்து வந்தது என்று பார்வதியம்மாளைப் பற்றி யறிந்தவர்கள் அப்போதைய நிலையைக் கண்டு ஆச்சரியப்படாம லிருக்க மாட்டார்கள். தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளையே மனைவியின் ஆவேச நிலையைக் கண்டு நடுநடுங்கிப் போனாரென்றால் அதிகம் கூறுவானேன்! அவரது அதிகார தோரணையும் கோபமும் எல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது. ஒரு சில விநாடிகள் அவர் ஒன்றுமே தோன்றாது அசைவற்று நின்று விட்டார்.

பார்வதியம்மாள் சிறிது ஆத்திரந் தணிந்தவளாய்ப் பேசத் தொடங்கி, "நாதா! நான் சொல்லுவதைக் கேளுங்கள்:—உங்கள் சமாசார மெல்லாம் எனக்கு நன்கு தெரியும். ஊரார் கண்களை மறைப்பதுபோல், என் கண்களையும் மறைத்து விட உங்களால் முடியாது. நான் உங்கள் நிழல்போல் உங்களுடனேயே இருப்பவளல்லவா! நீங்கள் சிறிது காலமாகச் செய்து வரும் காரியங்கள் வரம்பு மீறிய

வை; அநியாயமானவை. கடவுளுக்குப் பொறுக்காது. நீங்கள் உங்கள் வயிற்றில் பிறந்த பெண் போலுள்ள இராதையைப் பெண்டாளக் கருதியது சிறிதாயினும், நியாயமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். அவள் இனி ஒருவனை விவாகஞ் செய்துகொண்டு போய் அவனுடன் வாழ வேண்டியவளாயிற்றே! அத்தகைய கன்னிப் பெண்ணை நீங்கள் கெடுத்து விட்டால் பின்னர், அவள் கதி என்னாகும் என்பதையாவது எண்ணிப் பார்த்தீர்களா? கற்பிழந்து விட்டாள் என்று தெரிந்தால் அப் பெண்ணை யாராவது கட்டுவார்களா? அல்லது சாதியார்தான் சேர்த்துக்கொள்வார்களா! சமூகத்தைவிட்டே பகிஷ்காரஞ்செய்து விடுவார்களன்றோ! அப்புறம், அந்தத் தள்ளாத கிழவன் இவ் விளம் பெண்ணை வைத்துக்கொண்டு என்ன பாடு படுவான்? அவர்கள் பல வகையிலும் பரதவிப்பார்களன்றோ! அவ் வேழைகள் வடிக்கும் கண்ணீர் நம் குலத்தை வேரோடு அறுக்கும் வாளாகாதா! அவர்களுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட பாவம் நம்மைச் சூழ்ந்து சுட்டெரிக்காதா! நமக்கு மருக்கொழுந்துகள்போல் இரண்டு குழந்தைகள் இருக்கின்றனவே! அவைகளை யல்லவா இப் பாவமெல்லாம் சார்ந்து சுற்றி யடிக்கும். பெற்றோர் செய்தது பிள்ளைகளுக்காகும், என்கிறார்களே! அது பொய்யாகுமா! இவை யெல்லாம் கவனியாது கணநேர சிற்றின்பத்துக்காக இராதை போன்ற குலப் பெண்களை யெல்லாம் பலியிட்டுப் பாவ மூட்டையைக் கட்டிக் கொள்ளப் பார்க்கிறீர்களே! இது முறையா! இது தருமமா! இது நியாயந்தானா!

"உங்களைச் சொல்லிப் பயனென்ன! உங்களுக்கு இவ்விதத் துர் எண்ணம் உண்டாவதற்குத்

தூபம் போட்டு அதன் வாயிலாக வயிறு வளர்த்து வருகிறார்களே அந்தச் சதிகார சண்டாளர்களைச் சொல்ல வேண்டும்? அவர்களுக்கு இதுவும் ஒரு பிழைப்பா? கௌரவமான பிழைப்பு ஒன்றும் அவர்களுக்கு அகப்பட வில்லையா? உங்கள் போன்ற செல்வர்களைச் சூழ்ந்து இச்சகம் பேசி அவர்களுக்கு உகந்தவைகளை—அவை மிக்க கேவலமானவை யாயினும்—செய்து ஊதியம் பெற்று வருவது தானா, அவர்களுக்குச் சிறந்த தொழில்! இவர்களுக்கு மான மில்லையா? ஈனமில்லையா? தங்கள் சுய நலத்துக்காக மனித சமூகத்துக்கே இழிவைத் தேடி வரும் இக் கொலை பாதகர்கள் தலையில் இடி விழாதா! கொள்ளை நோய் பற்றிக் கொண்டு செல்லாதா?—அவர்கள்தான் வயிற்றுப் பிழைப்புககாக இவ்விதஞ் செய்கிறார்களென்றால், நீங்கள் கூட இதற்கு இணங்கலாமா? உங்கள் கௌரவமென்ன! செல்வமென்ன! செல்வாக்கு என்ன! பேர் என்ன! பிரக்கியாதி என்ன! இவையெல்லாம் ஒரு நொடியில் போய்விடுமே! வெளியில் சைவப் பழமாய், சிவ சொரூபமாய்—தான தருமங்களைச் செய்துவரும் தாங்கள்—தரும பூஷணம் எனப் பொதுமக்களால் பாராட்டப்பட்டு வரும் தாங்கள்—அந்தரங்கத்தில்—தருமத்திற்கு நேர்மாறாக இவ்வித அட்டூழியங்கள் செய்து வருகிறீர்களென்று இவ்வுலகம் அறிந்தால், உங்கள் பேரும் புகழுமெல்லாம் என்னாகும்? உங்கள் காம இச்சையைப் பூர்த்தி செய்வதற்காக, இராதை போன்ற குலப் பெண்களை இரகசியமாகக் கடத்திக்கொண்டு வருபவர்கள் உங்கள் சதிகார நண்பர்களாயினும், விஷயம் வெளிக்குத் தெரிந்தால்: உங்கள் பெயர்தானே கெடும்? அவர்கள் துராக்கிருதச் செயலுக்கே மூல காரணம் நீங்கள்தானே!

ஆதலால், இவ்விதக் கொடுங் குற்றங்களுக்கே நீங்கள்தான் பொறுப்பாளி யாவீர்கள். குலப் பெண்களை நரசோரஞ் செய்தது; ஓரிடத்தில் சிறைப்படுத்தி வைத்தது; பலாத்காரமாகக் கற்பழித்தது ஆகிய பெருங் குற்றங்களுக் கெல்லாம் நீங்களே ஆளாக நேரும். எக்கச்சக்கமாக விஷயம் வெளிப்பட்டால், நீங்கள் இப்போது அத்தியந்த நண்பர்களெனக் கருதும் இச்சதிகார நண்பர்களே உங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தாங்கள் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பார்களே யொழிய, உங்களைக் காப்பாற்ற மாட்டார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். சிவ பக்தராக இருக்கும் நீங்கள் சிற்றின்ப லோலராய்—அதுவும் குலப் பெண்களைக் கெடுக்கும் காமாதுரராய்—துச்சாரியாய் விளங்குகிறீர்கள் என்று உலகோர் அறிந்து தூற்ற ஆரம்பித்த பின்னர், நாம் இவ்வுலகில் உயிர்வாழ முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். அத்துடன், இக்குற்றம் வெளிப்பட்டால் அரசாங்கச் சட்டம் உங்களை லேசில் விடுமா என்றும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆதலால், இவ்விதப் பழி பாவங்களுக்கும், தண்டனைகளுக்கும் ஆளாவதற்கு முன், இராதையை இப்போதே கொண்டுபோய் அவளது தந்தையிடஞ் சேர்ப்பித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வாருங்கள். இத்துடன், இவ்விதத் துன்மார்க்கச் செயல்களைச் செய்வதினின்றும் விலகிச் சன்மார்க்கத்தை உண்மையாகப் பின்பற்றுங்கள். நமது குலத்தைக் கெடுப்பதற்குத் தோன்றியுள்ள எமதூதர் போலிருக்கும் இச் சதிகாரர்களை இவ்விடத்தி னின்றும் விரட்டியடித்துத் தலை முழுகி விடுங்கள். இதுவரை வெளிக்குத் தெரியாது இருந்து வந்ததுபோல் இனியும் இருக்கும் எனத் தைரியம் கொள்ள வேண்டாம். பாதகச் செயல்கள் எவ்வளவுதான்

சாமர்த்தியமாய்ச் செய்தாலும், என்றுயினும் ஒரு நாள் வெளிப்பட்டுப் போம்; அதன் பலனைக் கை மேல் தந்துவிடும் என்பது திண்ணம். ஆதலால் என் பேச்சைக் கேட்டு நடவுங்கள். ஏதோ பெண் பிள்ளை சொல்கிருள் என எண்ண வேண்டாம்'' என்று மூச்சு விடாது பேசினுள்.

தருமபூஷணம் 'கடகட'வெனக் கோப நகை செய்தவராய், ''பேஷ்! பிரசங்கம் நன்று யிருக்கிறதே! இதோபதேசஞ் செய்வதில் என்னைக் கூட வென்று விடுவாய் போலிருக்கிறதே!-ஆமாம். சுத்தப் பட்டிக்காட்டுப் பெண்ணுகிய உனக்கு மளமளவென்று பிரசங்கஞ் செய்யும் சாமர்த்தியம் எங்கிருந்து வந்ததென்பதைச் சற்று யோசிக்கும் போதுதான் மிக்க ஆச்சரியமா யிருக்கிறது. இவ்விதம் உபந்நியாசஞ் செய்ய எங்கு எப்போது கற்றுக் கொண்டாய்?......'' என நீட்டி முழக்கிக் கொண்டே போனுர்.

''எல்லாம் உங்களிடமிருந்து கற்றுக் கொண்டதுதான்'' என்றுள் பார்வதியம்மாள் வெறுப்போடு.

''அப்படியா! அதிருக்கட்டும். இந்தப் பிரசங்கத்தை யெல்லாம் மூட்டைக்கட்டி ஒரு பக்கத்தில் வைத்துவிடு. இந்த ஊருக்கெல்லாம் உபதேசம் செய்துவரும் என்னிடம் உனது நீதி யுபதேசங்கள் செல்லாது என்பதை நீ அறியவேண்டும். பார்வதி! உனக்கு மறுபடியும் நல்லவிதமாகச் சொல்கிறேன். என் விஷயத்தில் நீ தலையிடாதே. உன் காரியத்தைக் கவனித்துக்கொண்டு பேசா திரு. உன்னிடம் நான் அன்புக் குறைவாகவும் சுக சௌகரியங்களைக் கவனிக்காது பராமுகமாகவும் நடந்து கொண்டால் கேட்கலாம்..........''

"என்மீது அன்பாக இல்லாவிட்டாலும்கூட பரவாயில்லையே! எனக்குச் சுக சௌகரியங்களும் வேண்டாமே! ஏழைக் குலப்பெண்களைக் கற்பழிக்கும் அட்டூழியத்தை நீங்கள் விட்டுவிட்டால் அது போதும். 'திருடன் பெண்டாட்டி அரைக்கழுத்தி' என்பது போன்ற பழிச்சொல் என்னைச் சாராதிருக்க வேண்டுமே என்ற கவலைதான் என்னை அரித்து வருகிறது......"

"இந்த வாய் வேதாந்தம் தான் வேண்டாமென்று சொல்கிறேனே! மீண்டும் அவ்விதமே பேச ஆரம்பித்து விட்டாயே! எனக்குக் கோபமுண்டாகும்படி செய்யாதே!—ஆணாய்ப் பிறந்தவன் உலகிலுள்ள சுகபோகங்களையெல்லாம் ஐம்புலன்களும் ஆர அநுபவிக்க இருக்கிறானே யொழிய, கல்லில் வசிக்கும் தேரைபோல் அடுப்படியில் கிடந்துழலும் உன்போன்ற பெண்களைப்போன்று இருக்க அல்ல. நல்ல பழமாக இருந்தால் யாரும் புசிக்க ஆசைப் படுவது இயல்பு. பிறர் தோட்டத்தில் இருக்கிறதே யென்று தயங்க மாட்டார்கள்.--நீ ஏதோ பூச்சாண்டி காட்டுகிறாயே! வெளியே தெரிந்தால் மானம் போய்விடும்; அரசாங்கத் தண்டனை கிடைக்கும் என்று. அவைகளெல்லாம் ஏழை எளியவர்களிடம் அமுல் செய்யுமேயொழிய, என் போன்ற பணக்காரர்களை நெருங்கவும் நெருங்காது. ஜனங்கள் பின்னால் ஏதாவது முணுமுணுத்தால் முணுமுணுக்கலாமே யொழிய, எதிரே கூழைக்கும்பிடு போட்டு விட்டுத்தான் செல்வர். காசை வீசி யெறிந்தால் எப்பேர்ப்பட்ட அதிகாரியும் நாய்போல் வாலைக் குழைத்துவிட்டுப் பேசாது செல்வான்..........."

"நீங்கள் சொல்லுகிறபடி இங்குள்ள மனிதர்களை உங்கள் செல்வமும் செல்வாக்கும் சரிப்படுத்தி

விடுகிறதென்றே வைத்துக் கொள்வோம். கடவுளைச் சரிப்படுத்த முடியுமோ! நாம் செய்த அட்டூழியங்களுக்கெல்லாம் நாளைக்கு நாம் அவர் முன்னே பதில் சொல்லவேண்டாமா? யார் கண்ணில் மண்ணைத் தூவினாலும் அவர் கண்ணைக் கட்ட வியலுமா! எங்கும் கண்ணாகவும், எங்கும் காதாகவும் நிறைந்திருக்கும் சிவபெருமான், உங்களுடைய ஒவ்வொரு செயலையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார் என்பதை நீங்கள் மறக்கக்கூடாது."

"ஹஹ்ஹஹ்ஹா! சிவ பெருமான் எல்லாம் பார்த்துக் கொணடிருப்பார் என்று பயமுறுத்துவது பாமர மக்களையல்லவா! மகா பண்டிதனாகிய எனக்குக் கூடவா இந்தப் பாடம்? கடவுளைத் திருப்தி செய்ய எனக்குத் தெரியும். நான் செய்து வருகிற தான தருமங்களெல்லாம் எதற்காக வென்று நினைக்கிறாய்; நீ என்னமோ சொல்லுகிறாயே அட்டூழியங்களென்று; அவைகளை யெல்லாம் சரிப்படுத்துவதற்கே......"

"மனிதனுக்கு லஞ்சங் கொடுத்துச் சரிப்படுத்துவதுபோல், கடவுளையுந் தான தருமங்களால் திருப்திப்படுத்தி விடலாமென்றா நினைக்கிறீர்கள். அட கடவுளே! என்ன விபரீத புத்தி" என்று பார்வதியம்மாள் ஆயாசப்பட்டாள்.

தருமபூஷணம் எதையோ திடீரென நினைத்துக்கொண்டு துள்ளிக் குதித்து, "சரி; சரி; உன்னோடு பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. நீ போய் உன் வேலையைப் பார். மறுபடியும் இவ்விதமாக என் காரியங்களில் தலையிடாதே! தெரிகிறதா? போ! போ!—நான் சொல்கிறேன்; கல்லைப்போல் நிற்கிறாயே! போகிறாயா? நானே உன்

னைப் போகும்படியாகச் செய்யட்டுமா?'' என்று உறுமினார்.

பார்வதியம்மாள் அவ்விடத்தை விட்டு அசையாமலே, "இன்னும் நீங்கள் உங்கள் போக்கில் தான் இருந்து வருகிறீர்கள்போ லிருக்கிறது. அப்படியானால், முதலில் என்னையும் குழந்தைகளையுங் கொன்று போட்டுவிட்டுப் பின்னர் உங்கள் இஷ்டம்போல் நடந்து கொள்ளுங்கள். அப்புறம், உங்களைக் கேட்பாரில்லை. ஊரிலிருக்கும் பெண்களையெல்லாம் கொண்டுவந்து கொண்டாட்ட மடிக்கலாம்......'' என்று கூறினாள்.

"என்ன இருக்க இருக்கப் பேச்சு அதிகமாகிறது. மரியாதையாகச் சொன்னால் போகமாட்டாய்'' என ஆத்திரத்தோடு கூறியவர், பின்னர் "உன்னைக் கொன்றுவிட்டா மறுவேலை பார்க்கச் சொல்கிறாய்? என்றிருந்தாலும் நீ எனக்குத் தொல்லையா யிருப்பா யென்று அறிந்துதான்—அப்போதே தொலைத்துவிட வழி தேடினேன். பிள்ளைகளிருக்கின்றனவே; அவைகளை யார் பார்த்துக் கொள்வார்கள் என எண்ணிப் புத்தி மயங்கியது. அதற்கு இப்போதுபலன் கிடைத்துவிட்டது. இருக்கட்டும்; இப்போதும் என்ன முழுகிப்போய்விட்டது. உன்னை எப்படியாயினும் ஒழித்துவிட வழி தேடுகிறேன். இல்லாவிடில் பைத்தியம் பிடித்து விட்டதென்று கூறிப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலாயினும் கொண்டு போய் விட்டு விடுகிறேன்—'' என்று முணு முணுக்கத் தொடங்கினார்.

இச் சமயத்தில் அவரது சகாக்களில் ஒருவர் அங்கு வந்து, "எஜமான், நாம் போவதற்கு மணியாய் விட்டது. அந்தச் சபையார் நமது வருகையை

எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்" என்று கூறினர்.

"எல்லாம் தயாராய் விட்டதா? அப்படியானல் இதோ வந்து விட்டேன்," என்று கூறி அவரைப் போகச் சொல்லிவிட்டு, தருமபூஷணம் பார்வதியைப் பார்த்து, "நான் வெளியே பிரசங்கத்துக்குப் போக வேண்டும். நீ கீழே போய்க் குழந்தைகளைக் கவனி" என்று கூறிவிட்டு,—"ஏய்! கமலம், எங்கே இருக்கிருய்? இங்கு யாராகிலும் வரப்போகிருர்கள்? ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். யாரா யிருந்தாலுஞ் சரி; இங்கே அணுக விடாதே; துரத்தி விடு." என்று ஆர்ப்பாட்டஞ் செய்தார்.

இதுவரை வீட்டு எஜமானிக்குப் பயந்து ஒரு புறம் ஒளிந்துகொண்டிருந்த கமலம் என்னும் வேலைக்காரி ஓடோடியும் வந்து "அப்படியே பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று கூறியவாறு கை கட்டி வாய் புதைத்து நின்ருள். பார்வதியம்மாளின் உயிர்த் தோழியான சிவகாமியோ மற்ருெரு புறம் மறைந்திருந்து என்ன விபரீதம் நேருமோ என்ற பயத்தோடு காணப்பட்டாள்.

தன் கணவனது விடாப்பிடியையும் பேச்சையுங் கேட்ட பார்வதியம்மாளுக்கு ஆத்திரந் தாங்க முடியவில்லை. "பிரசங்கஞ் செய்யப் போக வேண்டுமா? யார் குடியைக் கெடுக்கப் பிரசங்கஞ் செய்யப் போகிறீர்கள். உள்ளே இவ்வித அக்கிரமங்கள் புரிவது? வெளியே பகவத் பிரசங்கஞ் செய்வது? ஏன் உங்களுக்கு இந்த ஆஷாடபூதித்தனம்? உங்கள் அட்டூழியங்களுக்குப் பிரசங்கம் பிராயச்சித்தமா? ......." என்று கோபத்தோடு பேசலானுள்.

இதுவரை வெளி வேஷத்துக்காக வாயினும் தருமபூஷணமாகக் காணப்பட்ட சந்திரசேகரம் பிள்ளை இப்போது உண்மையிலேயே அதர்மபூஷணமாய் மாறிவிட்டார். "என்ன சொன்னுய்? யாரிடம் பேசுகிறோம் என்றுகூடத் தெரியாமலா வாய்க்கு வந்தவாறு உளற ஆரம்பித்துவிட்டாய்? உனக்கு அவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது? —கழுதையே! போகிருயா? இல்லையா?—இன்னும் நின்ருல் நாயை அடிப்பதுபோல் அடித்து இழுத்துப் போடுவேன்," என்று கூறிக்கொண்டே ஆத்திரத்தோடு பார்வதியம்மாளை நெருங்கிக் கழுத்தைப் பிடித்து நெட்டநெட்டத் தள்ளினர். அவர் தள்ளிய வேகத்தில் ஸ்தூலதேகியான பார்வதியம்மாள் மெத்தைப்படிக்கட்டுப்பக்கம் போய் விழுந்து படிகளின் வழியாக உருளலானுள். இதே சமயத்தில் கீழே "அம்மா! அம்மா!!' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்த குழந்தைகள், தங்கள் தாய் படிகளின் வழியாக அலங்கோலமாக உருண்டு வருவதைக் கண்டு பயந்து "ஓ" வென அலறலாயின. இவைகளையெல்லாம் லட்சியஞ் செய்யாது தருமபூஷணம் ஆத்திரத்துடனேயே முன்புற வாயிலின் வழியாகக் கீழே போனர்.

எஜமான் போய்விட்டார் என்று அறிந்ததுமே சிவகாமி பதைபதைத்து ஓடோடியும் போய், பார்வதியம்மாளைத் தூக்கி ஆஸ்வாசப்படுத்தலானுள். கமலமும் அவளுடன் உதவி புரியலானுள். என்ன இருந்தாலும் பெண்ணல்லவா! வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்தால் இரக்கங்கூடவா இல்லாமல் போய்விடும்?

இதுவரை அறையினுள்ளிருந்து சாவித் துவாரத்தின் வழியாக யாவற்றையுங் கவனித்துக் கொண்டிருந்த இராஜசேகரன் துடிதுடிப்போடு

எழுந்து தன் அருகிருக்கும் இராதையை நோக்கி, "இராதா! காரியம் வெகுதூரத்துக்கு மிஞ்சிவிட்டது. அக் கொலைபாதகன் அந்த அம்மாளை அடித்துத் தள்ளிவிட்டான். ஆதலால், நான் உடனே போய், போலீஸுக்குத் தகவல் தெரிவித்து அழைத்து வரவேண்டும். நீ தைரியமாக இரு. கூடுமானால், நீ அந்த அம்மாளுக்கு ஏதேனும் உதவி செய். இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்" என்று கூறி, அவள் பதிலைக் கூட எதிர்பாராது ஜன்னல் வழியாகக் குதித்து வெளியேறினான். இராதையும் மெள்ளக் கதவைத் திறந்து வெளியே பார்த்துவிட்டு நடந்துவந்து பார்வதியம்மாளுக்குச் சைத்தியோபசாரஞ் செய்யும் விஷயத்தில் சிவகாமி முதலியவர்களோடு கலந்துகொண்டாள். பார்வதியம்மாளோ எதிர்பாரா அதிர்ச்சியாலும், எக்கச்சக்கமாகப் படிக்கட்டுக்களில் உருண்டதாலும் பாதிக்கப்பட்டு மூர்ச்சையுற்றிருந்தாள். எனவே, அந்த அம்மாளைத் தூக்கிக் கொண்டு போய் கீழேயுள்ள படுக்கையில் கிடத்தி, முகத்தில் நீர் தெளித்து விசிறி ஆஸ்வாசப்படுத்திக் கொண்டிருந்தனர்.

"ஸார்! நம்ம ஊர் காங்கிரஸய்யா உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்" என்றான் 113 நெம்பர் கான்ஸ்டேபிள்.

"ஓ அப்படியா! அழைத்துவா" என்றார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

இராஜசேகரன் அவசர அவசரமாக உள்ளே நுழைந்தான்.

"வாருங்கள்; வாருங்கள். உங்களைத்தான் தேடிக்கொண்டிருந்தேன்..............." என்று வரவேற்றார் இன்ஸ்பெக்டர்.

இராஜசேகரன் இவைகளையெல்லாம் கவனியாது, "ஸார், ரொம்ப அவசரம்; என்னோடு தயவு செய்து ஜவான்களை அழைத்துக்கொண்டு வாருங்கள். இராதை........." என்று சொல்வதற்குள், இன்ஸ்பெக்டர் இடைமறித்து, "எங்கே இருக்கிறாள்?" என ஆவலோடு கேட்டார்.

"தருமபூஷணம் மாளிகையில் சிறை வைக்கப் பட்டிருக்கிறாள்."

"என்ன! என்ன!! இராதை தருமபூஷணம் மாளிகையிலா இருக்கிறாள்? உண்மையாகவா!...."

"ஆமாம்."

"என்னஐயா! நீங்கள் இப்படிப் புரளிபண்ணுகிறீர்கள். தருமபூஷணத்தைக் கேட்டால் நீர்தான் இராதையைக் கடத்திக்கொண்டுபோய் வைத்திருப்பதாகக் கூறுகிறார். இப்போது நீரோ அவர் மாளிகையில் சிறைவைத்திருப்பதாகச் சொல்கிறீர்? நான் எதை நம்புவது? நீங்கள் இருவரும் பங்காளிகளா என்ன? ஒருவர்மீதொருவர் பழி போடு

கிறீர்களே! பலே அசாத்தியப் பேர்வழிகள் ஐயா நீங்கள்" என்று குத்தலாகப் பேசினர்.

இராஜசேகரன் பதைப்பைத் தோற்றுவித்து "இன்ஸ்பெக்டர் சார்; தமாஷ் பண்ண இது சமய மல்ல. நாம் இங்கு விவாதித்துக் கொண்டிருப்பதை விட, நீங்கள் என்னுடன் வந்து பார்த்தால், எது உண்மை என்பது தெரிந்துபோகும். ஆதலால், தயவு செய்து என்னுடன் புறப்படுங்கள்" என்று வற்புறுத்தினன்.

இராஜசேகரன் சத்தியசந்தன் என்பதை யறிந்தவராதலால், வேறு பேச்சின்றி இன்ஸ்பெக்டர் ஜவான்கள் இருவரை அழைத்துக்கொண்டு அவனுடன் புறப்பட்டார்.

* * *

"சிவநேயச் செல்வர்களே! சிவராத்திரி புண்ணிய வைபவமாகிய இத்தினத்தில் நாம் இங்குக் கூடி இருக்கிறோம். இத்தினத்தில் நாம் சிவபெருமானது பரத்துவத்தைப் பற்றியே பேசவேண்டும். அவனது புகழையே கேட்கவேண்டும். அவனது திருவுருவ தரிசனத்தையும் திருக்கோலத்தையும் கண்ணாரக்காணவேண்டும். அப்போதுதான் நமது ஜென்மம் சாபல்ய மடையும். நம்மைப் பிணித்திருக்கும் இருவினைகளுக்கும் மூலகாரணமாகிய காம மயக்கம் வெகுளி ஆகியவைகளை நம்மினின்றும் நீக்க இன்றே விரதம் பூணவேண்டும்......." என்று தருமபூஷணம் சந்திரசேகரம் பிள்ளை, சைவ பரிபாலன சபைக் கூட்டத்தில் மிக உருக்கமாகப் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தார். இச்சமயத்தில் கூட்டத்தினிடையே சிறிது பரபரப்பு ஏற்பட்டது. சிலர் "போலீஸ்! போலீஸ்!" என முணுமுணுத்தனர். தருமபூஷணம் பரபரப்புக்குரிய காரணத்தை எளிதில் அறிந்துகொண்டார்.

சிறிது தூரத்தில் அவ்வூர் சப் மாஜிஸ்திரேட்டும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், இராஜசேகரனும் மோட்டாரிலிருந்து இறங்கி ஜவான்களுடன் வந்து கொண்டிருப்பதைக் கண்டார். அவர் மனதில் கலவரமேற்பட்டது. அவரை யறியாமலே அவர் தேகம் நடுங்கியது. அவர் தம் பேச்சை நிறுத்தி மேடையை விட்டு இறங்கி மெள்ள அவ்விடத்தை விட்டு நழுவ முயன்ருர். அவருக்கு முன்னே அவரது கூட்டாளிகள் ஒவ்வொருவராக நழுவலாயினர். சபையினரோ, கூட்டத்திலுள்ளாரோ காரண மறியாது திகைத்திருந்தனர்.

தருமபூஷணம் வெளியேற முயல்வதைக் கண்டதும், போலீஸார் விரைந்து வரலாயினர். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்கள் தருமபூஷணத்தை வளைத்துக் கொண்டனர். ஜவான்கள் அவரது கூட்டாளிகளைக் கைது செய்தனர். மாஜிஸ்டிரேட் வாரண்டைப் பிறப்பித்தார். இன்ஸ்பெக்டர் அவர் கையைப் பிடித்தார். தருமபூஷணம் சர்வாங்கமும் ஒரு சாணுக ஒடுங்கிப் போனுர். அவர் உண்மையை ஒரு நொடியில் உணர்ந்துகொண்டார். அவர் கை கால்களெல்லாம் உதற லெடுக்கலாயின. எவ்வாறிருப்பினும் அவர் அவ்வூர் பெரிய மனிதராதலால் அதிக ஆர்ப்பாட்டமின்றி அவரை அழைத்துச் சென்று, அவரது காரிலேயே ஏற்றினர். இன்ஸ்பெக்டர் ஜவான்கள் அவருடன் அமர்ந்தனர். இவர்கள் வந்த காரில் மாஜிஸ்திரேட்டும் இராஜசேகரனும் ஏறிக் கொண்டனர். அக்காரில் இராதையும் உட்கார்ந் திருந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் இரு கார்களும் அவ்விடத்தை விட்டுச் செல்லவே, கூட்டத்தினர் உண்மையை யறியாமலே பலவிதமாகப் பேசிக்கொண்டு கலைந்தனர்.

*     *     *

"கண்ணே! இராதா! உன் வாக்குறுதியை எப்போது நிறைவேற்றப் போகிறாய்! உனக்காக இவ்வளவெல்லாம் பாடுபட்டேனே! அதற்கொன்றும் பரிசில்லையா" என்று மகிழ்ச்சியோடு கேட்டான் இராதையின் கைகளைப் பற்றிக்கொண்டிருந்த இராஜசேகரன்.

"உங்களுக்கா பரிசு! என்னையேதான் உங்களுக்குப் பரிசாக அளித்து விட்டேனே; இன்னும் என்ன? — ஆனால் நாம் பல்லோரும் அறிய கலியாணஞ் செய்துகொள்ள தந்தையை ஒரு பேச்சு கேட்கவேண்டாமா?" என்று கிளிபோலக் கொஞ்சிப் பேசினாள் இராதை.

"ஆகா; அவரது அநுமதியில்லாமலா!" என்று இராஜசேகரன் கூறினான்.

"நமக்குத் தோன்றாத் துணையாயிருந்து நம் குடும்ப விளக்கை ஒளிரச் செய்துவரும் இராஜசேகர ஐயாவுக்குத்தான் ஏற்கனவே உன்னைப் பரிசாகக் கொடுத்துவிட்டாயே இராதா! இன்னும் என் சம்மதமெதற்கு? என் குலக்கொழுந்தின் கருத்துக்குக்கூட குறுக்காக இருப்பேனா? உங்கள் விருப்பப்படியே ஆகுக" என்று ஆசீர்வதித்தார் அப்போதே உள்ளே நுழைந்த வாசுதேவப் பிள்ளை.

காதலர் இருவரும் அப்பெரியவரது காலில் விழுந்து வணங்கினர். வாசுதேவப் பிள்ளை ஆனந்தக் கண்ணீர் ததும்ப அவ்விருவரையும் பரிவோடு தூக்கி நிறுத்தி, இராதையின் கையைப் பிடித்து இராஜசேகரன் கையில் ஒப்படைத்தார். காதலர் கரங்கள் அன்பினால் பிணைப்புண்டன.

முற்றிற்று.

வேடசூரி